
Laodicean Times

# லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

தொகுப்பு10 தொகுதி 2 ஏப்ரல் - ஜூன் 2020




R 5430

## ‘‘நீதியும் நியாயமும் கிறிஸ்தவ குணலட்சணத்தின் ஆதாரம்’’

## “JUSTICE - RIGHTEOUSNESS - THE FOUNDATION OF CHRISTIAN CHARACTER”

‘‘பலியிடுவதைப் பார்க்கிலும், நீதியும் நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம்’’ – நீதிமொழி 21:3.

‘‘பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்’’ –1சாமுயேல்15:22.

இவ்வார்த்தைகள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாகிய யூதருக்கே சொல்லப்பட்டிருக்கின்றன. இஸ்ரயேல் தேசமானது, தேவனுடனான விசேஷமான உறவுக்குள் வந்திருந்தது. சீனாய் மலையில் தேவனோடுகூட அவர்கள் ஒரு உடன்படிக்கைக்குள் நுழைந்ததுடன், நீதியும் நியாயமும் செய்வதாக உறுதியளித்திருந்தார்கள். இது யேகோவா தேவன் எதிர்பார்த்த ஒன்றாகும். ஆனால் பலிசெலுத்துதல் குறிப்பாக தேவனுக்குப் பிரியமானதாக நினைக்கும் மனப்பான்மை இருந்ததாக தோன்றுகிறது. எவ்வளவு அநியாயமானவராக தாங்கள் இருந்தபோதிலும், ஒரு பலியை செலுத்தி அதையெல்லாம் சரிசெய்துவிடலாம் என்ற உணர்வில் சிலர் நாட்டங்கொண்டனர். ஆனால் இது அவைகளை சரிசெய்யாது என யேகோவா தேவன் சுட்டிக் காட்டினார். அவருடைய பிரமாணங்களே மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் முதன்மையான தேவையாகும். அதே சமயம், ஜெயங்கொண்டது போன்றவற்றிற்காக ஸ்தோத்திரம் செலுத்தும் இந்த விசேஷமான பலிகளானது, மனமுவந்து செலுத்தும் பலிகளாயும், சிறப்புரிமைகளாயும் இருந்தது. நியாயப்பிரமாணமானது தேவனிடத்தில் உண்மைப் பற்று வைக்க வலியுறுத்தியது.

தேவ ஜனங்களாக அவருடனான உறவு என்பது, நியாயப்பிரமாணத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்த நியாயப்பிரமாணமானது நீதியையும் நியாயத்தையும் உள்ளடக்கியது. அப்பிரமாணத்தின் கட்டளைகளின்படி இஸ்ரயேலர்கள் கிரியை செய்யவேண்டும். முதலில் தேவனுக்கானவைகளையும்,பின்பு மனிதனுக்கானவை–களையும் அவர்கள் செய்யவேண்டும். அவர்கள் களவு, கொலை, இச்சித்தல் போன்றவற்றை செய்யக்கூடாது. பொன்னான அப்பிரமாணத்தின் சாராம்சமும் உட்கருத்தும் அந்த பிரமாணத்தில் பொதிந்திருந்தது.

நியாயமான, சரியான மற்றும் சமத்துவமானதே நீதி செய்வதாகும். மனதில் நீதியான முடிவுகளை எடுப்பதும், நியாயமாக தீர்மானிப்பதுமே நியாயம் செய்வதாகும். ஒருவர் தனது சகாக்களுடனான வியாபார தொடர்புகளில் மிகவும் நீதியானவராக இருக்கலாம். எவ்வாறெனில், ஒரு பைசாவாகிலும் யாரொருவரையாகிலும் ஏமாற்றக்கூடாது என்பதில் மிகவும் கவனமாயிருக்கலாம். ஆனால் தன் மனதில் இரக்கமற்றவராக, மற்றவர்களைப் பற்றி தாராள மனப்பான்மையற்ற பார்வையுடையோராக பேசுவாராகில் அது மிகவும் அநீதியாகும். ஞானியின் இந்த ஆலோசனையானது அநியாயம் செய்யாமல் இருக்க காவல்காப்பதோடு, தவறான எண்ணங்களுக்கும் எதிரானதாக இருக்கிறது. நம்முடைய மனதின் முடிவுகளும், செயல்பாடுகளும் நீதியின் கொள்கைகளுக்கு இசைவாக இருக்கவேண்டும்.

**மற்றவர்களை நிதானிக்க நாம் தகுதியற்றவர்கள்**

உறுதியான ஆதாரங்களின்றி நாம் மற்றவர்களுக்கு

## இம்மாத வெளியீட்டில்

| | பக்கம் |
|---|---|
| .... நீதியும் நியாயமும் கிறிஸ்தவ குணலட்சண ஆதாரங்கள் ... | 1 |
| .... தேவனுடனான சமாதானமும், தேவனுடைய சமாதானமும் .. | 5 |
| .... விசுவாசமே உண்மை இளைப்பாறுதலுக்கு அடிப்படை ... | 9 |
| ... கெட்ட குமாரன் ... | 12 |
| .... தெய்வீகப் புதிர்கள் ... | 15 |

லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்து கொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M-1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயமுத்தூர் – 6. செல் : 93441 44000

செய்யவேண்டிய எந்தவொரு விஷயத்திலும் சாதகமில்லாத முறையில் நிதானிக்கவோ, அல்லது தீர்மானிக்கவோ கூடாது. ஒருவேளை சரியானவற்றையே செய்ய முயற்சிப்பதாக அவர்கள் கூறினால், இயன்றவரை அவர்களுடைய நேர்மையை நாம் மதிக்கவேண்டும். நாம் அவர்களை மாயக்காரர் என அழைக்கக்கூடாது, ஏனெனில் அவர்களுடைய இருதயங்களை நாம் நிதானிக்கமுடியாது. நம்முடைய கர்த்தர் இருதயங்களை அறிகிற உன்னத வல்லமை பெற்றவராயிருந்ததால் தம்முடைய நாட்களில் சிலரை மாயக்காரர் என அழைத்தார். நாமோ அவ்வல்லமையை பெற்றிருக்கவில்லை. நாமோ மற்றவர்களுடைய நோக்கங்களையும் நிதானிக்கக்கூடாது. நாம் தகுதியற்றவர்களாயிருப்பதால் அவர் கூறுவதற்குமேல் போகக்கூடாது.

நாம் சிலநேரங்களில் வெளிப்புறமான செயலை தவறு அல்லது முறையற்றது என தீர்க்கலாம், ஆனால் தவறாக நிதானிக்க வாய்ப்புள்ளதால், இருதயத்தை நிதானிக்க நாம் முற்படக்கூடாது. நம்முடைய ஒவ்வொரு சொல்லிலும், செயலிலும் , சிந்தனையிலும் ராஜரீகப் பிரமாணத்தை கடைப்பிடிக்கப் போராடுவதாக நாம் உறுதியளித்துள்ளோம். மேலும் நாம் பலி செலுத்தாவிட்டாலும், ராஜரீகப் பிரமாணத்தினுடனான நம் உறவை தக்கவைத்துக் கொண்டோமானால் அது தேவனுக்கு பிரியமானதாயிருக்கும் என நினைவில் கொள்ளவேண்டும். பதிலாக, பலி செலுத்துவதில் அதிக வைராக்கியத்தை வெளிப்படுத்தி, நீதியின் பிரமாணத்தை மீறினோமானால் அது தேவனுக்குப் பிரியமாயிருக்காது. நம்மை நாமே நேசிக்கிறது போல பிறரையும் நேசிக்கவேண்டும் என்பதை இப்பிரமாணம் எதிர்பார்க்கிறது. அன்பைப்பற்றி அப்.பவுல் தம்முடைய ஈடுணையற்ற அதிகாரத்தில் நினைவூட்டும்போது, **1கொரிந் 13:3**இல், "எனக்குண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை".

கிறிஸ்துவின் சீஷர்களாகிய நமக்கு சரியான வழி என்னவென்றால், நம்முடைய நடத்தையில் ராஜரீகப் பிரமாணத்தை கடைப்பிடிப்பதும், நம்முடைய எண்ணங்களையும் உதடுகளையும் காத்துக் கொள்வதாகும். மேலும் நமக்குண்டான யாவற்றையும், கர்த்தருடைய பலிப்பொருட்களாக செலுத்தி வருகிறோம். ஆனாலும் தேவனுடைய பிரமாணம் கோருகிறபடி கீழ்ப்படிதலும், நீதியும் முதன்மையானதாக வரவேண்டும். தியாக அன்பை வளர்ப்பதில் நாம் அதிக வளர்ச்சியை அடைவதற்கு முன்பு, நீதியும் நியாயமுமான அன்பைக் குறித்து கற்றிருக்கவேண்டும். ஒரு மனிதன் தயாள குணமுடையவனாக இருக்கும் முன்பு நியாயமானவனாக இருக்கவேண்டும் என்ற உண்மையான பழமொழி ஒன்று உள்ளது. எதுவெனில், எல்லாரிடத்திலும் கண்டிப்பான நீதியுடன் இருக்கவேண்டும் என்கிற பாடத்தை புது சிருஷ்டியின் அங்கத்தினர்களான தேவனுடைய பிள்ளைகள் மிகுந்த கவனத்தோடு கற்றுக்கொள்ளவேண்டும் என இது தூண்டக்கூடியதாய் உள்ளது. தேவனால் நாம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால், இக் குணாம்சத்தை அன்றாட வாழ்வில் நடைமுறையில் கொண்டுவருவது முற்றிலும் இன்றியமையாததாகும். ஏனெனில் அது எல்லா கிறிஸ்தவ குணங்களுக்கும் அடித்தளமாக உள்ளது.

வீழ்ந்துபோன மாம்சத்தில் இருந்துகொண்டு, நம் செயலிலும், சொல்லிலும், சிந்தையிலும் இந்த கண்டிப்பான நீதியின் பிரமாணத்தை பூரணமாக கடைப்பிடிக்க முடியாது. ஆனால் முடிந்தவரை அவ்வாறுசெய்வது ஜெபத்தோடுகூடிய பெருமுயற்சியாக இருக்கவேண்டும். எதேச்சையான மற்றும் தவிர்க்கமுடியாத குறைபாடுகளை கிறிஸ்துவின் புண்ணியம் ஈடுசெய்யும். இக்குணாம்சத்தை உறுதியான அடித்தளமாகக் கொண்டிருப்பவர்கள் மட்டுமே முறையான முன்னேற்றத்தை அடையமுடியும். அநீதியின்மேலும் நீதியின் கொள்கைகளைப் பற்றிய தவறான கருத்துக்கள்மேலும் கட்டப்பட்டிருக்கும் அன்போ மாயையானது. உண்மையான சீஷத்துவத்திற்கான சோதனையாக ஒருவருக்கு தேவைப்படுகின்ற, கர்த்தருடைய வார்த்தை கட்டளையிடும் அன்பு இது அல்ல. செயலிலும், சொல்லிலும், சிந்தையிலும் நீதியாக இருப்பதற்கு போராடுவதையே தேவனுக்கு கீழ்ப்படிதல் வற்புறுத்துகிறது.

**உண்மைத் தன்மைக்கான ஒரு பரீட்சையே கீழ்ப்படிதல்**
Obediance a test of loyalty

நம்முடைய இரண்டாவது ஆதார வசனத்தில்**(1சாமு15:22)** தரப்பட்டுள்ள, சாமுயேல் தீர்க்கதரிசியின் வாயினால் சவுலை கர்த்தர் கண்டித்ததில் கற்பிக்கப்பட்ட பாடம் ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு அதிக உத்வேகத்துடன் பொருந்தும். கிறிஸ்துவின் பின்னடியார்கள் என்று கூறப்படுகிறவர்களிடையே இந்த ஆலோசனையின் அவசியத்தை இன்று நாம் அடிக்கடி காண்கிறோம். இவர்களில் பலர் கிறிஸ்தவ மண்டலத்தின் பல்வேறு பிரிவுகளில் உள்ள ஊழியக்காரர்கள் ஆவர். இவர்களில் அநேகர் தங்களுடைய நேரம், சக்தி மற்றும் பணம் ஆகியவற்றை பலிசெலுத்துகின்றனர். ஆனால் இவர்களில் பெரும்பான்மையோர் கர்த்தருக்குக் கீழ்ப்படியாதவர்களாக இருப்பதால், அவர்கள் பெறவேண்டிய ஆசீர்வாதத்தை பெற

தவறுவதுடன், அதிகமான சிலாக்கியங்கள் மற்றும் வாய்ப்புகளிலிருந்தும் தங்களை துண்டித்துக் கொள்கின்றனர்.

பெரும்பான்மையோர் ராஜ்யத்திலிருந்து தங்களை துண்டித்துக் கொள்கிறார்கள். அந்த ராஜ்யத்தின் மகிமை மற்றும் எஜமானரோடுகூட உடன்சுதந்திரராவதிலிருந்து தங்களை துண்டித்துக்கொள்கிறார்கள். சவுலின் அனுபவங்களின் மூலம் நமக்குத் தரப்பட்ட பாடத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டும். எவ்வாறெனில், நம்முடைய பரமபிதா தம்முடைய வார்த்தைகளுக்கு நாம் மிகவும் கவனம் செலுத்தவேண்டும் என்றும், அவ்வார்த்தையை நாம் மேம்படுத்தவேண்டும் என ஒருகனம்கூட யோசிக்கக்கூடாது அல்லது எந்தவொரு சூழ்நிலைஅல்லது நிலைப்பாடோ அவருக்கு கீழ்ப்படியாத நிலையை உண்டாக்குமானால், அதற்கு மன்னிப்பு உண்டு எனவும் எண்ணக்கூடாது என விரும்புகிறார்.

சவுல் இராஜா தேவனுக்கு கீழ்ப்படிந்து, பின் அதன் விளைவுகள் பேரழிவு தருவதாக தோன்றியிருந்தால், அவருக்கு தெளிவான மனசாட்சி இருந்திருக்கும். அவர் கீழ்ப்படிந்திருப்பார், மேலும் முடிவுகளை தேவனிடமே விட்டிருக்கக்கூடும். அம்முடிவுகளுக்கு தேவனே பொறுப்பாளியாகி இருப்பார். இப்பாடத்தில் உள்ள அறிவுரைகளை பின்பற்றுவதன்மூலம், பாபிலோனில் உள்ள கர்த்தருடைய ஜனங்களில் எத்தனைபேர் ஆசீர்வதிக்கப்படுவார்கள்!

பெயர்சபைகளில் தற்போதைய ஏற்பாடுகள் மற்றும் நிலைமைகள், கிறிஸ்துவின் நற்செய்தியின் எளிமைக்கும், ஆதிகால சபையின் நடைமுறைக்கும் முரணானவை என நான் காண்கிறேன் என பலர் தங்களுக்குத் தாங்களே அடிக்கடி சொல்லிக் கொள்கிறார்கள். மேலும் வேத வசனங்கள் ஒப்புதல் ஆணை அளிக்காதவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு போதிக்கப்பட்டும் வருகிறது. ஆனால் நான் என்ன செய்யமுடியும் ? இந்த அமைப்புடன் நான் அடையாளங் காணப்பட்டு, அதன் மேம்பாட்டிற்கான தியாக வேலைகளில் ஈடுபட்டுள்ளேன். இப்போது நான் அதிலிருந்து விலகினால், அது அதிக அளவிலோ அல்லது குறைவாகவோ பெரும் பிரச்சனை அல்லது இழப்பை, அதற்கும், அதோடுகூட எனக்கும் தரும். தேவனுடைய வார்த்தைகளின்படி கர்த்தருடைய ஊழியத்தை எனது கரங்களில் பெறும்பொருட்டு, மனித அமைப்புகளிலிருந்து விடுபடவிரும்பினேன். ஆனால் என்னால் வெளியேறமுடியாது. ஏனெனில் நாம்அங்கு இருப்பது அவசியம்போல்தோன்றுகிறது. இங்கு எனக்கு ஊழியம் செய்வதற்கும், பலிசெலுத்துவதற்கும் மிகவும் வசதியான இடமாகத் தெரிகிறது.

இதுபோன்ற வாதங்களில் கர்த்தர் பிரியமாயிருக்கவில்லை. நாம் எந்தளவு சுறுசுறுப்பாக, செயல்திறத்தோடு இருந்தாலும், பலியைவிட கீழ்ப்படிதலே உத்தமம் என்பதே அவர் நமக்கு அளித்த செய்தியாகும். நாம் அவருடைய வார்த்தைக்கு முதலில் கீழ்ப்படிந்தாலொழிய, நாம் செய்யும் எந்தவொரு தியாகமும் அவரால் ஏற்றுக்கொள்ளப்படாது என தெளிவாகக் கூறுகிறார். இன்னும் பாபிலோனில் இருக்கும் கிறிஸ்துவின் பின்னடியார்களை அவர் இப்போதும் அழைக்கிறார்; ‘‘என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்’’ – வெளிப்**18:4,5.**

**கீழ்ப்படியாமையின் கனிகள்** The fruits of Disobediance

ஒவ்வொரு குறிப்பிட்ட விஷயத்திலும் கர்த்தருடைய கட்டளையை நிறைவேற்றத் தவறியதே சவுலின் தோல்வி என்பதை நாம் நினைவில் கொள்கிறோம். அவர் கொல்லாமல் உயிருடன் வைத்திருந்த ராஜாவைத்தவிர, மற்ற அமலேக்கியர்கள், முதியவர்கள் மற்றும் வாலிபர்கள் அனைவரையும் கொலை செய்தார். ஏதோ ஒரு வெற்றிவிழாவில் அவரை காட்சிப்பொருளாக காண்பிக்க அவர் நினைத்திருக்கலாம். ஆடு மாடு போன்ற மந்தைகளைப் பொருத்தவரையில் கொழுத்த மற்றும் நலமானவைகளைக் கொல்லாமல் விட்டுவிடுவதாகவும் மூர்க்கமான மற்றும் அடங்காதவைகளை முற்றிலும் அழிப்பதாகவும் ஒப்புக்கொண்டார்.

அந்த நிகழ்ச்சியை நாம் தியானிக்கும்போது, தேவனுடைய உறுதியான அதிருப்தியையும், சாமுயேல் தீர்க்கதரிசியினுடைய கோபத்தையும் கவனிக்கமுடியும். மேலும் சவுல் அனுபவிக்கவேண்டிய தண்டனையைப் பற்றி அவருக்கு அறிவிக்கப்பட்டபோது, இராஜா சாமுவேலுடைய அறிவுறுத்தல்களை தவறாக புரிந்துகொள்ளவில்லை. ஆனால் கணிசமான துணிகரத்துடன் அவைகளை மீறியுள்ளார் என்பதை தெளிவாகக் காண்கிறோம். இதன் விளைவாக சாமுயேலுக்கு அவர் அளித்த விளக்கவுரையில் கணிசமான அளவிற்கு பாசாங்குத்தனம் இருந்தது என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். முதலாவதாக அவர் தீர்க்கதரிசியை மரியாதைசெய்து வாழ்த்தி, பின் தேவனுடைய கட்டளைகளை நிறைவேற்றியதாக உறுதியளித்தார். அப்படியானால் என் காதுகளில் கேட்கிற ஆடுகளின் சத்தமும், மாடுகளின் சத்தமும் என்ன ? என்று

சாமுயேல் கேட்டபோது, தான் முற்றிலுமாக அவைகளை அழிக்காமல் தேவனுக்கு ஓரளவு மட்டுமே கீழ்ப்படிந்திருக்கிறதை, சவுல் புரிந்துகொண்டார்.

கர்த்தருடைய தீர்க்கதரிசியின் அதிருப்தியை கவனித்த சவுல், அந்த நலமான ஆடுகள் மற்றும் எருதுகள் கர்த்தருக்கு பலியிடப்படும்படி பாதுகாக்கப்பட்டுள்ளன என அவருக்கு உறுதியளிப்பதுபோல் பாசாங்கு செய்ய ஆரம்பித்தார். விழுந்துபோன மனித சுபாவமானது தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமை மற்றும் முறைகேடு செய்யும் போக்கை எப்போதுமே நியாயப்படுத்த முயல்கிறது! எல்லா சூழ்நிலைகளிலும் கீழ்ப்படிந்து நடப்பது என்பது எவ்வளவு சிறந்ததும் புத்திசாலித்தனமானதாகும்! இஸ்ரயேலின் இராஜாவாக நிராகரிக்கப்பட்டதன் மூலம் கீழ்ப்படியாமையின் பலனை சவுல் அறுவடைசெய்தார். நம்முடைய சொந்த போக்கை பின்பற்றுவதும், நம் மனசாட்சியை சமரசம் செய்வதனாலும், தேவனுடைய பிள்ளைகளாக நம்மேல் உள்ள பொறுப்பை தவிர்ப்பதற்கு முயற்சிப்பதனால் வரும் பலன்கள் எவ்வளவு கசப்பானவையாக இருக்கும்! கர்த்தருடைய பிள்ளைகளுக்கு இது பிரச்சனையையும், ஆவிக்குரிய பேரழிவையும் கொண்டுவருவதுடன், நம் பிதாவின் முகத்தை நமக்கு மறைப்பதும் நிச்சயமானதாகும்.

சாதாரணமாக கவனிக்கும்போது, பலி என்பது கீழ்ப்படிதலுக்கு அப்பாற்பட்ட ஒரு படியாகும். கீழ்ப்படிதல் என்பது தேவனிடத்திலான நம் கடமையாகும். நாம் தேவனுக்கு கீழ்ப்படியவேண்டும். தேவனுடைய சித்தமே அவருடைய சிருஷ்டிகளின் பிரமாணமாகும். இதுவே மிக உயர்ந்த வகையான கடமையாகும். ஆனால் தேவனுடைய ஜனங்களுக்கு அருளப்படும் தியாகம் செய்வதற்கான பாக்கியம், கடமைக்கும் அப்பாற்பட்டது. கர்த்தர் நம்மிடம் கேட்காததைக்கூட நாம் அவருக்கு தரலாம். ஆனால் நாம் பலிசெலுத்துவது தன்னார்வமானதேயன்றி கட்டளையிடப்பட்டதல்ல.

இவ்வார்த்தைகளை நமக்கு நாம் எவ்வாறு பயன்படுத்தலாம்? என்ற கேள்வி எழுகிறது. முதலாவதாக, தேவனுடைய ஜனங்களாக இருக்கவிரும்பும் சிலரை காண்கிறோம். அவர்கள் பலிசெலுத்துவதற்கான பாக்கியம் தற்காலத்தில் உள்ளது என்ற எண்ணத்தை புரிந்துகொள்வதாக தோன்றுகிறது. ஆனால் அதைவிட முதன்மையானதாக கருதப்படவேண்டியதான , தேவன் நேரடியாகத் தந்த கட்டளைகளை கவனிக்க தவறிவிடுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கீழ்ப்படிதலே பிரதானமானதேவை என்பதை உணரவேண்டும். தேவனுடைய பிரமாணத்தை யாரொருவராகிலும் பரிபூரணமாக கடைப்பிடிக்க முடியாவிட்டாலும், உண்மையான கீழ்ப்படிதலின் ஆவியை வெளிப்படுத்துவதுடன், அப்பிரமாணத்துக்கு இசைவாக இருக்க, உற்சாகமாக பெருமுயற்சி எடுக்கவேண்டும். பின்பு தான் பலியின் அர்ப்பணிப்பு வருகிறது. இந்த நிபந்தனைகளை பூர்த்திசெய்த அனைவருக்கும் பூரண திருப்தி அளிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

“இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதிய சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின” – 2கொரிந் 5:17.

அப்.பவுல் இவற்றைப் பற்றி கூறும்போது; “மாம்சத்தின்படி நடவாமல்,ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச்செய்தார்” – ரோமர் 8:4. நாம் ஆவியின்படி நடக்காவிட்டால், நாம் கர்த்தருக்கு செவிசாய்ப்பது இல்லை என்பதாகும். அம்மாதிரியான நிலையில் நாம் இருந்தால், நாம் எதை செய்தாலும் அதில் அவர் பிரியமாயிருக்கமாட்டார். புத்தகங்கள் விநியோகிப்பது மற்றும் (முழுநேர) பயணஊழியம் போன்ற ஊழியங்களுக்காக நம்முடைய நேரம் சிலவற்றை தியாகம் செய்தாலும், நீதியின்படி மற்றவர்களுக்கு செய்யவேண்டியவற்றை செய்யாவிட்டால், நாம் தேவனை பிரியப்படுத்தாதவராவோம்.

யாரொருவர் தன்னை தேவனிடம் அர்ப்பணிக்க முடிவுசெய்து, பின் இன்னொருவரிடம் அநியாயமாக நடந்துகொண்டோம் என உணர்ந்தால், மறுசீரமைப்பு செய்யப்பட்டாகவேண்டும். மற்றொருவரின் பணத்தை எடுத்து தேவனுடைய ஊழியத்துக்கு வழங்கவும், இன்னொருவரின் பணத்தைக்கொண்டு பெருந்தன்மையைக் காண்பிக்கும் உரிமை யாருக்கும் இல்லை. இது அநீதியின் ஒரு வடிவமாகும். இதை ஒரு பலியாக எண்ணாமல் முற்றிலும் புறக்கணிக்கக்கூடியதும், இது பிதாவுக்கு மிகவும் விரோதமாக செய்வதாகும். ஆயினும்கூட இதுவே பெரும்பாலும் நடைமுறையில் இருப்பதைக் காண்கிறோம். முற்றிலும் நேர்மையில்லாத வழியில் பணம் சம்பாதித்தவர் பலர் உள்ளனர். மேலும் மனசாட்சியை அமைதிப்படுத்த, அதில் சிலவற்றை தேவ ஊழியத்திற்கு வழங்குகிறார்கள். இவ்வகுப்பார் தேவப்பிரமாணத்தின் ஆழமான விஷயங்களை கவனிப்பதில்லை. அவர்கள் மற்றவரிடமிருந்து அநியாயமாக எடுத்துள்ளனர், பின்னர் வேறொருவருக்கு சொந்தமானதை எடுத்து கர்த்தருக்கு கொடுக்க விரும்புகின்றனர். தேவனுடைய சட்டம் நீதியைக் கோருகிறதே தவிர, இந்த

நடவடிக்கையில் பிரியமாயிருக்கவில்லை என்பதில் ஆச்சரியமேதுமில்லை.

அன்றாட வாழ்க்கையில் சாதாரண விஷயங்களுக்கு வரும்போது, கணவன்– மனைவி, பெற்றோர் – குழந்தைகள், சகோதர–சகோதரிகள், ஆசிரியர்–மாணவர், முதலாளிகள்– தொழிலாளிகள் என அனைத்திற்கும் நீதிதான் அடித்தளமாக இருக்கவேண்டும் என்பதைக் காண்கிறோம். இப்பாடத்தின் ஆதார வசனமானது மெய்த் திருச்சபையாகிய நமக்கு மிக முக்கியமான ஒன்றாகும். கிறிஸ்தவ குணத்தில் நீதியும், தேவனுடைய சட்டத்திற்கு கீழ்ப்படிதலும் முதலில் வருகிறது. இரக்கமும் கருணையும் பின்பு வருகிறது. கர்த்தருடைய ஜனங்கள் இந்த நீதியைக் காட்டிலும் குறிப்பாக கற்றுக்கொள்ளவேண்டிய வேறொரு கொள்கை நமக்குத் தெரியாது.

விழுந்துபோன மனித சுபாவத்தில் அநீதியானது பல வழிகளில் பயிர்போல வளருகிறது. சிறிய சிறிய அநீதிகள் தினசரி அற்ப விஷயங்களில் நடைமுறையில் உள்ளன. இவைகள் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. ஆனால் எவரேனும் அநீதியை ஒரு சிறியவழியில் வளர்த்துக்கொண்டால்கூட, அது இராஜ்யத்திற்கு தகுதிப்படுத்தாத ஒரு குணாம்சத்தை உருவாக்கிவிடும். நீதி என்பது தேவனுடைய சிங்காசனத்திற்கும், குணாம்சத்திற்கும் அடித்தளமாக இருப்பதால், அவருடைய ஜனங்களின் வாழ்க்கையை நிர்வகிக்கும் அடித்தள கொள்கையாய் இருக்கவேண்டும்.

**தலையும் சரீரமுமாகிய கிறிஸ்துவின் கீழ்ப்படிதல்** The obediance of the Christ

கீழ்ப்படிதலின் படிப்பினையானது கிறிஸ்து இயேசுவில் பரிசுத்தமாக்கப்பட்ட அனைவரின் இருதயங்களிலும் ஆழமாக பொறிக்கப்படவேண்டிய ஒன்றாகும். வெறும் எழுத்துக்களுக்கு மாத்திரம் கீழ்ப்படியாமல், கீழ்ப்படிதலின் ஆவியுடையவர்களாக நாம் இருப்பது மிகவும் அவசியமானது. உண்மையான கீழ்ப்படிதலின் ஆவி உள்ள எவரும் தேவனுடைய வார்த்தையில் தரப்பட்டுள்ள வெளியரங்கமான அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதுடன், ஒவ்வொரு விஷயத்திலும் தேவசித்தத்தை அறிய முயற்சிப்பார். கர்த்தருடைய வழியில் செல்ல வழிநடத்தப்படுவதற்காக, அவருடைய வாழ்க்கையில், தேவனுடைய வழிநடத்துதல்களை கவனிக்க முற்படுவார். அத்தகைய உண்மையுள்ள கீழ்ப்படிதலுள்ள தேவனுடைய பிள்ளைகள் தீர்க்கதரிசியினுடைய வார்த்தையில் ஆச்சரியமடைகின்றனர். “உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது; சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடை நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது” – எரேமியா 15:16. இதோ வருகிறேன் என்தேவனே, உமக்குப் பிரியமானதை செய்ய பெருமகிழ்ச்சியடைகிறேன்” என இவர்கள் நம் அருமை போதகரோடு சேர்ந்து கூறமுடியும். பரலோகப் பிதாவினால் முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாம் அனைவரும், இந்த நீதியின் பிரமாணத்திற்கிணங்க, நம் குணங்களை கட்டியெழுப்ப மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருப்போமாக. நம் எண்ணத்திலும், சொல்லிலும், செயலிலும் நீதியின் இந்த அஸ்திபாரத்தை உடையோராய் இருப்போமாக. தேவனுடனான உறவிலும், சகோதர சகோதரிகளிடமும், மற்ற எல்லாரிடமும் நீதியோடு இருப்போமாக. அதன்பின்பு, எல்லாவற்றிற்கும் ஜீவனுள்ள தலையாக உள்ள கிறிஸ்துவுக்குள் வளர்ச்சியடைந்து, இறுதியில் நம்முடைய கணக்கை, துக்கத்தோடு அல்ல, மகிழ்ச்சியோடு ஒப்படைக்க அன்பின் பல்வேறு வகையான குணலட்சணங்களை கட்டியெழுப்புவோமாக, ஆமென்.

------------------

**R 5431**

## “தேவனுடனான சமாதானமும், தேவனுடைய சமாதானமும்”

## “PEACE WITH GOD AND THE PEACE OF GOD”

**ஆதார வசனங்கள் : ரோமர் 5:1; ஏசாயா 26:3** ; “இவ்விதமாய் நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்”. “உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர் ”

தேவனுடனான சமாதானத்தின் நிலைக்கு வந்திருப்பது என்பது ஒருவர் தேவனுடன் ஒப்புரவாகியிருப்பதை அர்த்தப்படுத்துகிறது. இது “துர்க்கிரியைகளினால் சத்துருக்களாயிருந்ததின் முந்தைய விலக்கப்பட்ட நிலையை சுட்டிக்காட்டுகிறது. பின்னர், தேவனுடனான சமாதானம் என்பதன் பொருள், தேவனுடனான இந்த நட்புமுறிவு ஒரு கடந்தகால

காரியமாகவும், இப்படி முறிவுபெற்ற ஒருவர், தற்போது தேவனுடன் இசைவில் இருக்கிறார் – அதாவது, அவர் பாவத்துக்கு தன்னுடைய முதுகைக் காட்டி, நீதியின் பாதையில் நடப்பதற்கு தேடுகிறார் என்பதையும் அர்த்தப்படுத்துகிறது. இது விசுவாசத்தின் படியாகவும், வாழ்க்கையின் சீர்திருத்தத்தோடு இணைந்து செல்வதாயும், உள்ளது. இந்த தூரம்வரை வந்திருக்கிற அனைவருடனும் நாம் மகிழ்ச்சியடைகிறோம். இந்த பிரபஞ்சத்தின் தேவனால் குருடாக்கப்பட்டு, கர்த்தருடைய அழகை காணமுடியாமலும், அவரோடு சமாதானமாயிருக்க விருப்பமில்லாமலும் , பாவத்தின் கனிகளின் கசப்பை கற்றுக்கொள்ளாதவர்களுமாயிருக்கிற மனுக்குலத்தின் பெருந்திரளானவர்கள்மேல் இந்த அனுகூலமான நிலையை அவர்கள் பெற்றுள்ளார்கள் என்பதற்காக நாம் களிகூறுகிறோம்.

ஆனால், நம் இரண்டாவது ஆதார வசனத்தில் தீர்க்கதரிசி, தேவனுடனான சமாதானத்தின் நிலையில் இன்னும் கூடுதலாக சென்றிருக்கிற ஒரு வகுப்பாரைக் குறிப்பிடுகிறார். அப்.பவுல் அறிவிப்பதுபோல், ''எல்லாப் புத்திக்கும் மேலான தேவனுடைய சமாதானத்தை உடைமையாக அடையும் நிலைக்கு வந்திருக்கிற ஒரு வகுப்பாரைப் பற்றி பேசுகிறார். இந்த சமாதானம், தங்களுக்கென்று எதையும் வைத்துக்கொள்ளாமல், ஒப்புக்கொடுத்திருக்கிற– அதாவது, தங்கள் நேரம், திறமைகள், செல்வாக்கு, தங்கள் ஜீவியம், தங்களுடைய எல்லாவற்றையும் தேவனுக்கு தங்குதடையின்றி ஒப்புக்கொடுத்திருக்கிறவர்களுக்கு மாத்திரமே வரும். இவர்கள் மற்ற எவரும்அறிய முடியாத ஒரு சமாதானத்தை உடையவர்களாயிருக்கிறார்கள். இந்த சமாதானம், உபத்திரவம் மற்றும் குழப்பங்கள் மத்தியிலும் அவர்களுடைய இருதயத்தை ஆளுகை செய்கிறது. இது தேவனுடன் அந்த ஆத்துமா கொண்டுள்ள நெருங்கிய உள்ளார்ந்த, தனிப்பட்ட உறவுன் நேரடி விளைவாயிருக்கிற ஒரு அமைதி மற்றும் இளைப்பாறுதலாக இருக்கிறது. இது தேவன் மாத்திரம் தரக்கூடிய சமாதானமாக, அவருடைய சொந்தமானவர்கள் மாத்திரம் முழுமையாக அறியமுடிகிற சமாதானமாக இருப்பதால், இது தேவனுடைய சமாதானமாக இருக்கிறது.

நம் அன்பிற்குரிய கர்த்தர் தம் சீஷர்களை விட்டுச்செல்லும்போது, என்ன ஒரு விலையேறப்பெற்ற பரம்பரை சொத்தை அவர்களுக்கு விட்டு சென்றிருக்கிறார்! ''சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன், உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக'' என்று அவர் கூறினார்(யோவா14:27). இது உண்மையாகவே ஒரு விலைமதிப்பற்ற பரம்பரை சொத்தாக இருந்தது, மேலும் இந்த யுகம் முழுவதும், அதன் முடிவுவரையிலும் உள்ள முழு சபைக்குமான சுதந்திரமாக இது இருக்கிறது. கிறிஸ்தவர்களின் வாழ்க்கைமுறை சமாதானத்திற்கு வெகுதொலைவில் இருக்கிறது, கர்த்தருடைய பரிசுத்தவான்கள் பெரும்பாலும் புயலின் மத்தியில் கடற்பிரயாணம் செய்கின்றனர் என்று, இந்த உலகத்திற்கு காணப்படலாம். ஆனால் விசுவாசத்தினால் நம்முடைய இருதயங்கள் கிறிஸ்துவின்மீது தொடர்ந்து நிலைத்திருக்குமானால், நம்முடைய நங்கூரத்தை விட்டுவிடாதிருப்போமானால், வாழ்க்கையின் எல்லா புயல்களும் எவ்வளவு கடுமையாக நம்மை புரட்டிப் போட்டாலும் எவ்வளவு கடுமையாக அந்த புயல்கள் சீற்றங்கொண்டாலும் நாம் காக்கப்படுவோம்.

''கர்த்தராகிய ஆண்டவர் எனக்கு துணைசெய்கிறார்; ஆகையால் நான் வெட்கப்படேன் ?, நான் வெட்கப்பட்டுப் போவதில்லை என்று அறிந்திருக்கிறேன்: ஆதலால் என் முகத்தை கற்பாறையைப் போலாக்கினேன்'' (ஏசா50:7) என்று ஏசாயா தீர்க்கதரிசியோடு சேர்ந்து நம் விசுவாசத்தை உரக்க சொல்லமுடியும். நம்முடைய நங்கூரமானது தேவனுடைய சிங்காசனத்தை உறுதியாக பற்றிக்கொண்டிருப்பதனால், கர்த்தருடைய உறுதிப்பாடுகளின்மேல் நாம் இளைப்பாறமுடியும். ''நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன்'' என்பது நம் போதகரின் இருதய மொழியாக இருந்தது. அவர் ஆதியிலிருந்து பிதாவுடன் இருந்தார். பிதாவின் அன்பும் நற்குணமும் அவருக்குத் தெரியும். பிதாவின் வல்லமையின் வெளிப்பாடுகளை அவர் பார்த்திருக்கிறார். பிதாவின் அன்பிரக்கத்தை அவர் தெளிவாக கண்டிருக்கிறார். எனவே தேவனுடன் இதேபோன்ற உறவுக்குள் வந்திருக்கின்ற நாம், அவருடைய அன்பையும், உண்மைத்தன்மையையும் அறிந்து நம்புகிறோம்.

**கர்த்தரிடத்திலான சமாதானம்**

கர்த்தர் வெளிப்புற உணர்வின்படியான சமாதானத்தோடு தம் ஜனங்களை ஆசீர்வதிப்பதில்லை. போதகரின் விசேஷ கூட்டாளிகளான அப்போஸ்தலர்கள் தாக்கப்பட்டனர், அவருடைய எல்லா பின்னடியார்களுக்கும் அதுபோலவே இருக்கும். எதிராளியானவன் தன்னுடைய

வல்லமையினால் அவர்களுடைய ஜீவியங்களில் எல்லாவற்றையும் செய்தாலும், அவனால் சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தமுடியாது. இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்கிற அனைவரிடத்திலும் இது உண்மையாயிருக்கிறது. உட்புறமும் வெளிப்புறமும் சமாதானத்திற்கு பதிலாக நாம் போராட்டங்களையே பெற்றிருக்கிறோம்.நாம் நம் சொந்த மாம்சத்தோடு போராடுகிறோம், நல்லபோராட்டம் போராடுகிறோம், ஒரு ஜெயங்கொள்ளும் போராட்டம் போராடுகிறோம் என்பது நம் வெற்றியின் பகுதியாக இருக்கிறது. நாம் உலகம் மற்றும் எதிராளிக்கு எதிரான போராட்டத்தில், சாத்தான் நம்முடைய சிந்தைகளிலும் இருதயங்களிலும் வைக்கிற எல்லா காரியங்களுக்கும் எதிரான போராட்டத்தில், நம்முடைய சிறந்த முயற்சிகளை முன்வைக்கவேண்டும். இவைகளில் மேலானவற்றை நாம் பெறவேண்டும். இந்த கஷ்டங்களை ஜெயங்கொள்வதற்கான பெலத்துடன் கர்த்தர் தம் ஜனங்களை ஆசீர்வதிக்கிறார்.

நாம் மாம்சத்துடன் சமாதானத்தோடு அல்ல, மாறாக எப்போதும் அதனுடன் யுத்தத்தில் இருக்கிறோம். எனினும் அங்கு , கர்த்தரிடத்திலும் அவருடைய வாக்குத்தத்தங்களின் மேலுள்ள விசுவாசத்திலும் பிறந்த ஒரு சமாதானம் அவரிடத்தில் இருக்கிறது. அவருடைய கிருபை போதுமானதாக இருக்கிறது என்று அவர் நமக்கு வாக்களித்திருக்கிறார். நாம் சந்திக்கும் சோதனைகள் மற்றும் நமக்கு மிகவும் பெரியதாயிருக்கிற கஷ்டங்களினால் மேற்கொள்ளப்படமாட்டோம் என்று அவர் வாக்களித்திருக்கிறார். நாம் அவருடைய பெலத்தில் நம்பிக்கைகொண்டிருந்தால், நாம் ஜெயம்பெறுவோம் என்று நமக்கு உறுதியளிக்கப்படுகிறது. இது நமக்கு, நம் எல்லா அனுபவங்களிலும் இளைப்பாறுதலையும் சமாதானத்தையும் தருகிறது.

எல்லா அமளி மற்றும் போராட்டங்களின் இடையே

முழங்குகிற அந்த இசையை நான் கேட்கிறேன்!

அது என் ஆத்துமாவில் ஒரு எதிரொலியைக் காண்கிறது;

பாடுவதை நான் எப்படி நிறுத்தமுடியும்?

நாம் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களில் இளைப்பாறுகிறோம், நாம் அவருடைய பெலத்திலும், அவரது வாக்குத்தத்தங்களை நன்மைக்காக ஏற்படுத்தும் அவரது திறனிலும் இளைப்பாறுகிறோம். நம்மை அழைத்தவர் அவருடைய நல்வார்த்தைகள் எல்லாவற்றையும் நிறைவேற்றுவதற்கு ஏதுவானவராக இருக்கிறார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இந்த சமாதானம் அல்லது இளைப்பாறுதல் பரிசுத்தஆவியின் விசேஷித்த ஆசீர்வாதமாயிருக்கிறது. நாம் பரிசுத்தஆவியை, தேவனுடைய பரிசுத்த சிந்தையை, பரிசுத்த மனப்பான்மையை பெறுகின்ற விகிதத்தில் மாத்திரமே, இந்த சமாதானம் நம்மில் நிரம்பியிருக்கமுடியும். இது ஒரு எளிய விகிதாசாரத்தின் விஷயமாயிருக்கிறது. கிருபையிலும் கர்த்தருடைய அறிவிலும், சத்தியஅறிவிலும் வளரும்போது, நம்மை ஆறுதல்படுத்துகிறதற்கும், பெலப்படுத்துகிறதற்கும் இதை பெற்றிருப்போம். இவ்வாறு ஒவ்வொரு நாளும் தேவனுடைய சமாதானத்தை அதிகமாகப் பெறுவோம். அவருடைய அன்பில் நம்மால் நிலைத்திருக்கவும் முடியும்.

''நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்'' – இது நம்முடைய அறிவுரைக்கும் தேறுதலுக்கும் எழுதப்பட்டிருக்கிறது. இந்த விசுவாசம் ஒரு நிச்சயமான அடித்தளமாகிய தேவனுடைய வார்த்தையின் சாட்சியத்தின்மீது கட்டப்பட்டிருக்கிறது. பலமான, அசைக்கப்படாத விசுவாசத்தின் மூலமாக மாத்திரமே, தேவனுடைய சமாதானம் அவருடைய பிள்ளைகளுடன் வாசம்செய்யும். தேவன் நம்மை அவருடைய பிள்ளைகளாக, சுதந்தரவாளிகளாக, நம் கர்த்தருடன் உடன் சுதந்தரவாளிகளாக உருவாக்கியிருக்கிறார். இவர்களுக்கு ''எந்த நன்மையையும் வழங்காதிரார்''. ''சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது'', ''அவர்கள் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவருடைய கரங்களில் ஏந்தி செல்கிறார்''. ''அவர் கண்கள் நீதிமான்கள்மீது நோக்கமாயிருக்கிறது, அவர்களுடைய கூக்குரலுக்கு அவரது செவி திறந்திருக்கிறது'', ஆகவே நாம் பெலமுள்ளவர்களாயிருப்போமாக!

**விசுவாசத்தின்மீது சமாதானம் நிறுவப்பட்டுள்ளது**

இந்த தேவசமாதானம் அதிர்ஷ்டத்தின் புன்னகையையோ, உடன்நலத்தையோ, நண்பர்களின் கூட்டத்தையோ சார்ந்ததல்ல, மாறாக உடல்நலம் குன்றியபோதிலும், வறுமை வந்தபோதிலும், மரணம் நம்மிடமிருந்து நம் இருதய பொக்கிஷங்களை திருடியபோதிலும் தங்கியிருக்கிற சமாதானமாயிருக்கிறது. இது இந்த ஜீவியத்தின் மாற்றங்கள் மற்றும் திருப்பங்கள் எவற்றாலும் நம்மிடமிருந்து எடுக்கமுடியாத ஒரு சமாதானமாயிருக்கிறது. எதிரிகள் தொடுவதற்கு வல்லமையற்றவர்களாயிருக்கும்படியான ஒரு சமாதானமாயிருக்கிறது. நம் பிதாவால் தம் பிள்ளைகளுக்கு ஐஸ்வரியமிகுந்த இதைக் காட்டிலும் என்ன ஈவைத் தரமுடியும்?

நம்முடைய நங்கூரமிடுதல் கிறிஸ்துவில் இல்லாதிருக்குமானால், நம்முடைய சுதந்திரம் இன்றைய

நாளில் எவ்வளவு ஏழ்மை நிலையில் இருந்திருக்கும்! இதைக்கொண்டு, பிதாவின் அன்புள்ள ஏற்பாடுகள் நமக்கென அனுமதிக்கிற எல்லாவற்றையும் நம்மால் தாங்கிக்கொள்ளமுடியும். ஆகையால், வருகின்ற நாட்களை அமைதியுடனும் தைரியத்துடனும் எதிர்கொள்வோமாக! கொந்தளிக்கிற கலிலேயாக் கடலின் மீது தம் அன்பான சீஷர்களுடன் இருந்தவர், தம் வார்த்தையின் வல்லமை மூலம் புயல்காற்றை அடக்கி, கடலின் சீற்றத்தை அமர்த்தியவர், இன்றையநாளிலும் அவருடைய சீஷர்கள் மீது அதே பராமரிப்பை அளிக்கிறார். அவர்கள் பயத்தில் கதறும்போது, அவர்களுடைய இருதயங்களை அமைதிப்படுத்தி, "அற்ப விசுவாசிகளே ஏன் பயப்படுகிறீர்கள்" என்று சொல்கிறார். நம்முடைய இருதயங்கள் அவர்மீது நிலைத்திருக்குமானால், எந்த மதிநுட்பமும் நம்மை புண்படுத்தமுடியாது.

இந்த பூரண சமாதானத்தை அனுபவிப்பதற்காக நம் பிதாவின் அன்பில் வழுவிப்போகாத நம்பிக்கை உடையவர்களாகவும், உண்மைத்தன்மையில் நிலைத்திருக்கிறவர்களாகவும் இருக்கவேண்டும். நட்சத்திரங்கள் நிறைந்த வானங்களை நாம் பார்க்கும்போது, தேவனுடைய வல்லமை மற்றும் மகத்துவத்தின் வெளிப்பாட்டை நாம் காண்கிறோம். ஆனால் நம் இருதயங்களும் சிந்தைகளும் இதில் தங்கியிருக்காது. அதில் நீடித்திருக்காது. அவரிடமிருந்து வரங்களை நாம் பெறலாம், ஆனால் அவருடைய தாபரிக்கும் விசுவாசத்தின் அறிவின்றி, இவைகள் எதிராளியிடமிருந்து நம்மை காயப்படுத்துவதற்கான கண்ணிகளாக மாத்திரமே இருக்கலாம் என்பதை நம்மால் அறியமுடியாது. ஆனால் விசுவாசத்திற்கான இந்த முறையான அடித்தளத்தை உடையவர்களாக இருப்போமானால், பிதாவினுடைய வார்த்தையின்மூலம் (நாம் அவரை அறிந்து கொள்ளக்கூடிய ஒரே வழி) அவரை அறிந்துகொள்வதற்கு கற்றுக்கொள்வோமானால், நாம் அவரில் பற்றுறுதி வைக்கும் நிலைக்கு வருகிறோம்.

நாம் நம்முடைய சொந்த காரணகாரியங்களில் நம்பிக்கை வைப்போமானால், நாம் மிகவும் திருப்தியற்ற ஒரு நிலையில் இருப்போம், எல்லாம் நிச்சயமற்றதாக இருக்கும், விசுவாசத்திற்கோ அல்லது உறுதிப்பாட்டிற்கோ எந்த உறுதியான அடித்தளமும் நாம் அடையாதிருப்போம். ஆனால் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல்வரை உள்ள வேதாகமத்தின் சாட்சிகளை கவனிக்கும்போது, நீதி, ஞானம், அன்பு, மற்றும் வல்லமையுள்ள தேவனை நமக்கு வெளிப்படுத்துகிறது, நம் இருதயங்களும் மனங்களும் அவரைப் பற்றிக்கொள்வதற்கு நியாயமான சிலவற்றைப் பெற்றிருந்து, அதனைப் பிடித்துக்கொண்டு நாம் கூறுவோம்; அவர் நம்பிக்கைக்கு பாத்திரமாய் இருப்பதினால், இப்படிப்பட்ட ஒரு தேவனை நம்பமுடியும். இந்த உறுதிப்பாடு, அவருடைய வாக்குத்தத்தங்களை பற்றிக்கொண்டு, அவைகள் நமக்காக வைக்கப்பட்டிருப்பதை நிரூபிப்பதனால் அடையும் உறுதிப்பாடு, இது மகிழ்ச்சிக்குள் நம்மை ஆழ்த்துகிறது. இவ்வாறு அவைகளின் உண்மைநிலையைக் கற்றுக்கொண்டு அவைகள் நிறைவேறுவதை உணர்கிறோம். இந்த அன்புள்ளதேவன் தம்முடைய குமாரன் மூலமாக மீட்பு அளிப்பதற்கு நம்மை அழைத்திருக்கிறார் என்பதால் நாம் களிகூறுகிறோம். அவர் நமக்கு நித்யஜீவனை அளித்திருக்கிறார் என்பதாலும், தம்முடைய குமாரனோடுகூட ஒரு மகிமையான உடன்சுதந்திரத்துவம் அடைவதற்கு நம்மை அழைத்திருக்கிறார் என்பதால் களிகூறுகிறோம்(ரோமர் 8:17).

**சமாதானம் முழு கீழ்ப்படிதலின்மீது சார்ந்திருக்கிறது**

கூடுதலாக, எதிர்காலத்தில் முழு உலகத்திற்கான அற்புதமான ஏற்பாடுகளை அறிந்துகொள்வதற்காகவும், நாம் களிகூறுகிறோம். இவைகளெல்லாம், கர்த்தரிடத்திலான சமாதானம், சந்தோஷம், நம்பிக்கைகளுக்கான ஒரு உறுதியான அடித்தளத்தை உருவாக்குகிறது. ஆனால் நம்முடைய சமாதானமானது நம்முடைய நிலைத்தன்மைக்கு, நம்முள் தங்கியிருக்கிற பண்புகளுக்கு ஏற்ற விகிதத்தில் இருக்கும். தேவன்மீது தங்கள் மனதை நிலையாக பொருத்தியிராத எவரும், இந்த தேவனுடைய சமாதானத்தை தக்கவைத்துக்கொள்ள முடியாது. இது மூர்க்கத்தனமான சமாதானமோ அல்லது சோம்பேறித்தனத்தினாலுண்டாகும் சமாதானமோ அல்ல, மாறாக தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டதும், அவருடைய வாக்குத்தத்தங்களின் மூலமாக நம்முடைய உடைமையாக ஏற்படுத்தியிருக்கிறதுமாகிய சமாதானமாய் இருக்கிறது. இது கர்த்தரிடத்திலான நமது முழு கீழ்ப்படிதலின் மீதும் சார்ந்திருப்பதாய் உள்ளது. இது "என்னுடைய சமாதானம்" என்கிறதாகிய கிறிஸ்துவின் சமாதானமாய் இருக்கிறது. இந்த சமாதானமும் இதை ஊக்குவிக்கிற விசுவாசமும், நம்முடைய நம்பிக்கைகளின் மகிமை நிறைந்த பலனுக்கான மகிழ்ச்சியான எதிர்பார்ப்பை, கண்ணீரோடு நோக்கிப்பார்க்கும். இவைகளை தேவன் வாக்குறுதி அளித்திருக்கிறார். அவற்றில் நம்முடைய தற்போதைய சமாதானமும், முன்ருசிபார்த்தலாக இருக்கிறது.

சமாதானம், பூரண சமாதானமா?

நம்முடைய எதிர்காலமெல்லாம் அறியப்படாததா?

இயேசுவை நாம் அறிந்திருக்கிறோம், அவர் சிங்காசனத்தின்மீது இருக்கிறார்!

சமாதானம் பூரண சமாதானமா ?

மரணம் நம்மையும் நம்முடையதையும் நிழலாடுகிறதா ?

இயேசு மரணத்தையும் அதன் எல்லா வல்லமைகளையும் முறியடித்திருக்கிறார்!

சமாதானம், பூரண சமாதானமா ?

பாடுகளின் மத்தியில் கூர்மையான துன்பமா ?

இயேசுவின் இரக்கம் இளைப்பாறுதலை பதிலிற்காக கொண்டுவரும்.

இதுபோதும்! பூமிக்குரிய போராட்டங்கள் விரைவில் நிறுத்தப்படும்,

இயேசு நம்மை பரலோக பரிபூரண சமாதானத்திற்கு அழைக்கிறார்.

----------

**R 5433**

## "விசுவாசமே உண்மை இளைப்பாறுதலுக்கு அடிப்படை"

## "FAITH THE BASIS OF TRUE REST'

"விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்" – எபிரேயர் 4:3.

வாரத்தின் ஏழாம் நாளன்றும், ஏழாவது வருடமும் 49ம் மற்றும் 50ம் வருடமும் யூதனுக்கு சரீர ரீதியிலான இளைப்பாறுதலை நியாயப்பிரமாணம் ஏற்பாடுசெய்து கொடுத்திருக்கிற உண்மையை நம் திறவுகோல் வசனத்தில் பரிசுத்த பவுல் குறிப்பிடுகிறார். இந்த ஓய்வுநாட்கள், வரவிருக்கிற மேலான இளைப்பாறுதலுக்கு அடையாளமாக இருக்கின்றன, கிறிஸ்துவுக்குள் விசுவாசமாயிருக்கிற அனைவரும் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கிறார்கள், இவ்வாறு தொடர்ச்சியான ஓய்வுநாளை அனுசரிக்கிறார்கள் என்று அப்போஸ்தலர் சுட்டிக் காட்டுகிறார். புதுசிருஷ்டிகளாக நாம் கர்த்தருக்குள்ளும், அவரது வாக்குத்தத்தங்களிலும் நிலைத்திருப்போமானால், நாம் எல்லா நேரத்திலும் இளைப்பாறுதலடைவோம்.

இளைப்பாறுதலடைய விசுவாசம் இன்றியமையாதது என்று அப்போஸ்தலர் கூறுகிறார். தேவன் நமக்கு ஏற்கனவே ஏற்பாடு செய்துள்ளவைகளை நமக்கு பிரயோஜனப்படுத்த என்ன செய்யவேண்டும் என்று அவர் நமக்குக் கூறுகிறார். தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தங்களை ஏற்படுத்தினார், இவை ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டன என்று அவர் நமக்கு காண்பிக்கின்றார். ஒரு விசேஷித்த பரிசுத்த தேசத்தை ஏற்படுத்துவதே தம் நோக்கம் என்று தேவன் அறிவித்திருந்து, ஆபிரகாமின் வித்தின் மூலமாகவே உலகிற்கு ஆசீர்வாதம் வரவேண்டும் என்றும், அவர்களே இந்த தெரிந்தெடுக்கப்பட்ட தேசமாக ஏற்படுத்தப்படுவர் என்றும் அவருக்கு வாக்களித்திருந்தார்.

ஆபிரகாம் இந்த செய்தியை விசுவாசித்து, மகிழ்ச்சியடைந்தார். அவர் இளைப்பாறினார். ஆசீர்வாதத்தை தேவன் எவ்வழியில் கொண்டுவருவார் என்று அவர் அறியாதபோதிலும், தம் ஆணையால் உறுதிப்படுத்தப்பட்ட தேவனுடைய வாக்குத்தத்தத்தைப் பெற்றிருந்தார். அப்பொழுது, கர்த்தராகிய இயேசுவைக் குறித்தோ, அல்லது இரட்சிப்பின் திட்டத்தைக் குறித்தோ அறியவேண்டும் என்ற அவசியம் அவருக்கில்லை. தேவனை விசுவாசிப்பதில் அவர் முழு இளைப்பாறுதலை அடைந்திருந்தார். ஆபிரகாமைப்போல், அதே விசுவாசத்தை, அவரது பின்சந்ததியார் அத்தனைபேரும், அவ்வாறே பயிற்சிசெய்தனர். இவ்வாறு ஈசாக்கு யாக்கோபு , தாவீது தீர்க்கதரிசி மற்றும் அநேக தீர்க்கதரிசிகளும் தேவனிடத்தில் நம்பிக்கை வைத்திருந்தனர். அவர்கள் தேவனிடத்தில் முழு இணக்கமாய் இருந்தனர் என்று அவர்களுடைய எழுத்துக்கள் காண்பிக்கின்றன. வருங்காலத்திற்கென்று அவர் ஒரு கிருபை நிறைந்த ஏற்பாட்டை உண்டுபண்ணியிருக்கிறார், இந்த ஏற்பாடு பொதுவாக, உலகிற்கும் உரியது என்று அவர்கள் தெளிவாக புரிந்திருந்தனர். ஆயினும் உலகின் ஜனங்களைக்காட்டிலும் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையவிருப்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர். தேவனால் இன்னும் நிறைவேற்றப்பட்டிராத இக்காரியங்களில் அவர்கள் விசுவாசத்தின் இளைப்பாறுதலை அடைந்திருந்தனர்.

"ஆபிரகாம் தம் நாளைக் கண்டார், கண்டு களிகூர்ந்தார்" என்று நம் கர்த்தராகிய இயேசு பிரகடனப்படுத்தினார். அவர் தம் சுபாவக் கண்களால் அதைப் பார்க்கவில்லை, விசுவாசக் கண்களாலேயே கண்டார். எல்லா மனிதருக்காகவும் மரித்திருந்த கிறிஸ்து, அந்நாளில் மனித குடும்பத்தை உயர்த்தி, பாவம் மற்றும் மரணத்திலிருந்து உலகத்தை மேலெழுப்புவார் என்று அவர் கண்டார். முதலாவதாக, அவரது மணவாட்டியை மேன்மைப்படுத்துவார், இறுதியில் ஒவ்வொரு சிருஷ்டிப்புக்கும் தேவனுடைய ஆசீர்வாதம் சென்றடையும்படி செய்வார். இதுவே தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்திருந்ததாகும். "உனக்குள்ளும்

உன் வித்துக்குள்ளும் பூமியின் குடும்பங்கள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்''. ஆபிரகாம் மகிழ்ச்சியடைந்தார், அதைக் காண்கிற ஒவ்வொருவரும் மகிழ்வார்கள். அவருடைய பின்சந்ததியாருக்கு ஒரு மாபெரும் ஆசீர்வாதம் வைக்கப்பட்டிருப்பதையும், அவர்கள் மூலமாக உலகத்தாருக்கும் சென்றடைவதையும் கண்டு, ஆபிரகாம் திருப்தியடைந்தார். நாம் அதைக் காண்பதுபோல் ஆபிரகாம் தேவ திட்டத்தை தெளிவாகக் காணவில்லையெனினும், சந்தோஷமடையுமளவுக்கு கண்டார் –யோவான் 8:56.

**அதிகரிக்கும் வெளிச்சமும், பெரிதான பரீட்சைகளும்**

நம் யுகத்திற்கு கடந்துவரும்போது, நாம் ஒரு மாபெரும் வெளிச்சத்தையும், ஒரு மாபெரும் சிலாக்கியத்தையும் காண்கிறோம். இது அநேக விஷயங்களில் மாபெரும் விசுவாசப் பரீட்சைகளை கொண்டுவந்திருக்கிறது. தம் குமாரன் ஈசாக்கை பலிசெலுத்தும்படி அவரிடத்தில் கூறப்பட்டதனால் ஆபிரகாம் சோதிக்கப்பட்டார். தம் குமாரன் மூலமாக வாக்குத்தத்தங்கள் நிறைவேறும் என்று அவர் அறிந்திருந்தாலும், கீழ்ப்படிதலைக் காண்பிக்கவேண்டியது தனக்குரியது, மரித்தோரிலிருந்து தம் குமாரனை தேவனால் எழுப்பமுடியும், தேவனுடைய திட்டம் நிறைவேறுவதிலுள்ள என் விசுவாசத்தை இது தடைசெய்யாது என்று அவர் கூறினார்.

சுவிசேஷயுகத்தில் ஜீவிக்கும் நாம், நம்மிடம் பேசும் தேவனுடைய குரலை, ஆபிரகாமைப்போல் காதால் கேட்டதில்லை.ஆனால் தேவனுடைய மாபெரும் திட்டம் கூடுதலாக வளர்ச்சியடையும் நேரத்தில் நாம் வாழ்ந்துவருகிறோம். உலகிற்கு அவர் தம் குமாரனை அனுப்பியிருக்கிறார், அவர் மாம்சமாகி நம்மிடையே வாசம் பண்ணினார், ''அநீதருக்காக நீதிமான் '' மரித்தார்.

இயேசு தேவகுமாரனாயிருந்திருப்பாரானால் அவர் மரித்திருக்கமாட்டார் என்று அவிசுவாசம் உறுதியாய்க்கூறும். ஆனால் நீதியானது மனுக்குல சந்ததியை அடமானத்திற்குள் வைத்திருக்கிறது, ஒரு மீட்பர் அளிக்கப்படாவிடில், இவர்களுடைய நிலைமை நம்பிக்கையற்றதாக இருந்தது. ஆகவே இன்றைக்கு விசுவாசக் கண்கள், ஆபிரகாமைக் காட்டிலும் தேவனுடைய நோக்கங்களை கிரகிக்கக்கூடிய ஆற்றலை முழுமையான வழியில் பெற்றிருக்கிறது. ஆயினும் நாம் அதிக சோதனைகளையும் சிரமங்களையும் பெற்றிருந்தாலும், பெரிதான வாய்ப்புக்களையும் அதிக வெளிச்சத்தையும் உடையவர்களாயிருந்தாலும், ஆபிரகாமைக் காட்டிலும் நம் விசுவாசம் பெரியது என்று நாம் அறிந்திருக்கவில்லை. தேவனிடத்தில் ஆபிரகாம் முழு விசுவாசமும், முழு பற்றுறுதியும் வைத்திருந்தார், இதைக்காட்டிலும் வேறு ஒருவரும் வைத்திருக்கவில்லை.

மனுக்குலம் பாவம் மற்றும் மரணத்திலிருந்து விடுவிக்கப்படும் என்று தற்காலத்திலுள்ள கர்த்தருடைய பிள்ளைகள் நம்புகிறார்கள். சிலர் மற்றவர்களைக் காட்டிலும் அதிக அறிவுடையவர்களாயிருந்து, அதிக பரீட்சைகளை அடைவர். சிலர் குறைந்த ஆற்றலே உடையவர்களாயிருப்பதனால் கடினமான பரீட்சைகளை அவர்களால் சகிக்கமுடியாது. இவர்களால் முழுமையாக மகிழவும் முடியாது. ஆனால் தேவனிடத்தில் விசுவாசம் வைக்கும் இளைப்பாறுதலை, ஆபிரகாம் அடைந்திருந்த அதே இளைப்பாறுதலை எல்லோரும் அடைந்திருப்பார்கள். தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்கு, மகிமை மற்றும் கனத்துக்கான ஆசீர்வாதத்தை, இளைப்பாறுதலாக வாக்களித்திருந்தார். ஆனால் இவர்கள் நிஜமாகவே அதை இன்னும் அடையவில்லை. இந்த சுயாதீனத்தை நாம் தற்போது மெய் உறுதிப்பாடாக மட்டுமே அடைந்துள்ளோம். தேவன் தாம் வாக்களித்திருக்கிற அந்த மகிமையான நிலைக்கு நம்மை கொண்டுசேர்ப்பார் என்றும், விசுவாசத்தின்மூலம் வெற்றிபெறமுடியும் என்றும் நாம் உணர்ந்துகொள்கிறோம். நாம் உண்மையுள்ளோராய் இருந்தால் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். அவரவர் தாங்கள் அடைந்துள்ள அறிவு மற்றும் விசுவாசத்தின் அளவுக்கேற்ப இளைப்பாறுதலை அடைவார்கள். தேவனிடத்தில் நம்பிக்கை வைத்திருந்தால் மட்டுமே அதிகம் கற்றவரும், அதிக பேதையாயிருப்பவருமே இந்த இளைப்பாறுதலை அடையமுடியும்.

**விசுவாசத்தின் விகிதாச்சாரத்துக்கேற்ப இளைப்பாறுதல்**

நாம் இளைப்பாறுதலுக்குள் நுழைந்திருக்கிறோம் , ஆனால் இது நம் இறுதியான இளைப்பாறுதல் அல்ல. இன்றைக்கு நாம் விசுவாசம் வைத்திருப்போமானால், இன்றைக்கு இளைப்பாறுதலை நாம் அடைந்திருப்போம். விசுவாசத்தை நாம் இழப்போமானால், இளைப்பாறுதலையும் நாம் இழப்போம். ஆனால் நிரந்தரமான பரிபூரண இளைப்பாறுதல் நமக்கு காத்திருக்கிறது. தேவன் பெரிதானதும் விலையேறப்பெற்றதுமான நிச்சயமானவைகளை நமக்கு வாக்களித்திருக்கிறார். அவர் நம் சிருஷ்டிகரும், நம் பிதாவுமாயிருந்து, அவர் வாக்களித்திருக்கிறவைகளை நமக்காக செய்வார். நம் விசுவாசத்தின்படியே இது நம்முள் நிறைவேறும்– அதிக விசுவாசம் அதிக இளைப்பாறுதல், குறைவான விசுவாசம்

குறைவான இளைப்பாறுதல். தேவனிடத்தில் இணக்கமாய் இருப்பவர்கள் எவரோ, அவர்கள் அவரது சாட்சியத்தை நம்புவார்கள்.

தெய்வீகத்திட்டம் எல்லாவற்றையும், தேவனுடைய பிள்ளைகளாய் இருப்பவர்கள் எல்லோரும் விசுவாசிக்கிறார்கள் என்று இது சுட்டிக்காட்டுவதில்லை. ஏனெனில் இது சாத்தியமல்ல என்று நாம் காண்கிறோம். விசுவாசிப்பதற்கு சிலர் பெரிதான வாய்ப்பை அடைந்திருக்கிறார்கள், சிலரோ குறைந்த வாய்ப்பையே பெற்றுள்ளனர். இன்றைய நாளில் வாழ்கிற நாம், நம் நாளுக்கு முன்பு வாழ்ந்தவர்களைக் காட்டிலும் அதிக அனுகூலத்தைப் பெற்றிருக்கிறோம். ஆகவே நமக்கான பரீட்சையானது, அறிவில் குறைவுபட்டதிலிருந்து அதிகளவில் வராது. மாறாக, தேவனிடத்திலான விசுவாசத்தின் பரீட்சையாகவும், நமக்கு தற்போது கொடுக்கப்பட்டிருக்கிற வெளிச்சத்திற்கு கீழ்ப்படிதலின் பரீட்சையாகவுமே இருக்கும். இந்த யுகத்தின் முடிவில், தற்போது அருளப்பட்டுவருகிற இந்த பெரும் வெள்ளமாகிய வெளிச்சத்தை பெற்றிருக்கிற நம் விசுவாசம், அதிக பலமுள்ளதாக இருக்கவேண்டும். தற்போது கிடைக்கின்ற அறிவை ஆதாயப்படுத்தி, விசுவாசத்தை அதிகதிகமாக அதிகரிக்கத் தேடவேண்டும். நாம் விசுவாசத்திலும், கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்ச்சிபெறவேண்டும். கர்த்தர் நமக்கு ஏற்பாடு செய்திருக்கிற உதவிகளை நாம் பயன்படுத்துவோமானால், ஆழமானதும் அதிக அறிவுத்திறம் வாய்ந்த இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்போம். நாம் உண்மையாகவே நம்புவோமானால், அதற்கிசைவான கிரியைகளை நம் நம்பிக்கையாக வெளிப்படுத்துவோம்.

வேதாகம பயன்பாட்டின்படி, விசுவாசித்தல் என்ற வார்த்தை, ஒரு உண்மையை சாதாரணமாக ஏற்றுக்கொள்வதைக் காட்டிலும், அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. வேதாகமம் "சுவிசேஷம்" என்று அழைப்பது, மாபெரும் சத்தியம் "நற்செய்திகளாக" நம் எல்லோர் முன்பாகவும் இருக்கிறது. நம் திறவுகோல் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "விசுவாசம்" என்பது, இந்த சுவிசேஷத்தில் விசுவாசம் வைத்திருப்பதை சுட்டிக்காட்டுகிறது. நாம் விசுவாசிக்கிற அந்த சுவிசேஷம் என்ன ? விழுந்துபோன சந்ததியாராகிய நம்மீது காண்பித்த தேவ அன்பு மற்றும் இரக்கத்தின் எல்லா அம்சங்களையும் இது உள்ளடக்கியுள்ளது. கிறிஸ்துவின் மூலமாக கொடுக்கப்பட்டுள்ள நித்திய ஜீவனையும், அதோடு இதில் சம்பந்தப்பட்டுள்ள எல்லா ஆசீர்வாதங்களையும் உள்ளடக்கியுள்ளது. சுவிசேஷ சபைக்கான சுவிசேஷமானது, இராஜ்யத்தில் கிறிஸ்துவோடுகூட உடன்சுதந்திரராகும் வாய்ப்பை உள்ளடக்கியதாகும்.

நம் திறவுகோல் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்காமல், வாக்களிக்கப்பட்ட இந்த ஆசீர்வாதங்கள்மீது ஒருவன் அறிவுக்கூர்மையான விசுவாசம் வைக்கக்கூடும். ஆனால் இவ்வகையிலான விசுவாசம், அப்போஸ்தலரது எண்ணத்தின் வெளிப்பாடு அல்ல. தனிப்பட்ட நபர் அந்த உண்மைகளை அங்கீகரிக்கும் அளவுக்கு, அவற்றை ஏற்றுக்கொண்டு அதன்மீது செயல்படுகிறார், அந்தளவுக்கு அவர் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கிறார். அவர் பகுதியளவு விசுவாசிப்பாரானால், அவர் அதிகம் இளைப்பாறுதலை அடைவார். பரிபூரணமாக விசுவாசிப்பாரானால், அவர் பரிபூரணமான இளைப்பாறுதலை அடைவார், தன் விசுவாசத்தை தன் கிரியைகளால் காண்பிப்பார். சுவிசேஷ செய்தி மிகவும் அற்புதமானதாகையால், அதை நம்புகிறவன் அதினுடைய ஆசீர்வாதங்களை அடைய விருப்பங்கொள்வார். தெய்வீக சுபாவத்துக்கு கிறிஸ்துவோடுகூட உடன்சுதந்திரராகும்படியான வாய்ப்பு அளிக்கப்படுமானால், மேலும் அவ்விஷயத்தை மனது கிரகித்துக்கொண்டபின், அப்படிப்பட்ட வாய்ப்பை ஒருவர் ஏற்காதிருப்பாரானால் நிஜமாகவே ஒரு முட்டாளாயிருப்பார். ஆகவே யாராகிலும் ஏற்றுக்கொள்ளாவிடில் விசுவாசிப்பதில்லை என்ற விதத்திலேயே நம் திறவுகோல் வசனம் உபயோகிக்கப்பட்டுள்ளது. உண்மையாகவே விசுவாசிக்கிற அனைவரும் அப்படிப்பட்ட வாய்ப்பை ஏற்றுக்கொண்டு, விசுவாசத்தின்மூலம் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பார்கள்.

**இருதயத்தில் நம்பிக்கை அத்தியாவசியமானது**

"விசுவாசித்தவர்களாகிய நாமோ " என்ற திறவுகோல் வசனத்தின் வெளிப்பாடு, விசுவாசம் இருதயத்தினை அடைந்திருக்கிறது, நம் வாழ்க்கை வழிமுறையில் விளைவை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை உணர்த்துகிறது. "இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கிறோம்" என்ற அவ்வசனத்தின் இரண்டாவது பகுதி, அவர் விசுவாசித்திருக்கிறபடியால் இளைப்பாறுதல் படிப்படியாக அவருக்குள் வந்துகொண்டிருப்பதை உட்குறிப்பாய் உணர்த்துகிறது. அவர் முதலாவதாக விசுவாசித்திருக்கிறார், அவரது விசுவாசம் படிப்படியாக பலமாய் வளர்ச்சியடையும்பொழுது, அவர் ஏற்றுக்கொண்டிருப்பதை அதிகதிகமாக மதிப்பிடக் கற்றுக்கொள்ளும்பொழுது முழு இளைப்பாறுதலை அடைவார் என்பது படிநிலையாயுள்ளது.

மனிதன் தலையில் மட்டுமல்ல, இருதயத்திலும் விசுவாசிக்கிறான். இது அறிவாற்றல் சார்ந்த விசுவாசம் மட்டுமல்ல, சுவிசேஷத்தை உண்மை என நாம் ஏற்றுக்கொள்ளும்பொழுது, அதற்குள் முழுமையாக நாம் பிரவேசிக்கிறோம். இந்த இளைப்பாறுதலை ஓரளவு அடையத் துவங்குகிறோம். பின்பு கர்த்தர் நமக்குக் கொடுத்துள்ள வாக்குத்தத்தங்களுக்கு எவ்வளவு உண்மையாயிருக்கிறோம் என்று நம் அனுபவங்கள் மூலமாக கற்கும்பொழுது, இளைப்பாறுதல் அதிக ஆழமாயும், நிலையானதாயும் ஆகிறது. தேவனுடைய செய்தியில் ஆரம்பத்தில் வைத்திருந்த விசுவாசம், முழு விசுவாசமாயிருந்தது, ஆனால் நாம் கிருபையிலும் தேவ அறிவிலும் வளரும்பொழுது, நம் விசுவாசம் அதிக ஸ்திரத்தன்மையையும், நிலைநாட்டப்பட்ட தன்மையையும் அடைகிறது, அதன் அளவுக்கேற்ப நம் இளைப்பாறுதலும் உள்ளது.

------------

**R 5434**

## “கெட்ட குமாரன்”

## “THE PRODIGAL SON’

**ஆதார வசனங்கள் : லூக்கா 15:11–32.**

**“திறவுகோல் வசனம் : லூக்கா 15:18 “நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்”**

கெட்ட குமாரனின் உவமையைக் குறித்து, பின்வரும் கருத்துக்கள் தரப்பட்டுள்ளன;

“மாபெரும் போதகரின் தலைசிறந்த படைப்புக்களில் உன்று” – டேவிட் கிரேக் D.D.

“சுவிசேஷத்திற்குள் சுவிசேஷமாக, எல்லா உவமைகளுக்கும் மகுடமும் முத்துமாக இது பொருந்துகிறது ” – D.S.கிளார்க் D.D.

“இதன் அழகும் இதன் கருணைப் பண்பும், கற்பனைக் கதைகளின் ஆளுகையோடு ஒப்பிடப்படமுடியாதது”-R.H.மெக்கிம் D.D.

“நம் கர்த்தரின் உவமைகளிலுள்ள மற்றவைகளைக் காட்டிலும், இது ஒரு முழுமையான உருவகக் கதை” – நியூ சென்ச்சுரி பைபிள்.

“மற்ற எந்த உவமைகளைக் காட்டிலும், அநேகருடைய இருதயங்களை இது தொட்டிருக்கிறது” – W.E.பர்ட்டன் D.D.

இவ்வுவமையைக் கொடுத்த நம் போதகரின் நோக்கத்தை இதன் காட்சியமைப்பு காண்பிக்கிறது. இவ்வுவமையில் ஆயக்காரர்கள் மற்றும் பாவிகளைக் குறித்த பரிசேயர்களின் மனநிலை தவறு என்று காண்பிப்பதோடு, ஒரு வருடத்திற்கு முன்னால் விழுந்துபோனவர்களை அவர் தேடுவதுபோல் கருதப்படுகிறது. பொது ஜனங்களைக் குறித்த பரிசேயரது தவறான மனப்பான்மை, இராஜ்யத்தில் இவர்களுக்கான சொந்த பங்கை இழக்கும்படி செய்யும் என்று கர்த்தர் சுட்டிக் காட்டுகிறார்.

இவ்வுவமையில் இரண்டு குமாரர்களைப் பெற்றிருந்த தகப்பன், யேகோவா தேவனைக் குறித்துக்காட்டுகிறார். இரண்டு குமாரர்கள், இங்கு யூதா தேசத்தின் இரு பொது வகுப்பினர்களாக பிரிந்திருக்கிறவர்களை குறிக்கின்றனர். மூத்த குமாரன், மோசேயின் ஆசனத்தில் அமர்ந்திருந்து, அவர்களுடைய வெளிப்புற உத்தியோகத்தில் தேவனுக்கு உண்மையுள்ளோராய் நிலைத்திருந்தோரை குறிப்பிடுகிறது. இவர்கள் குறைந்தளவு அவர்களுடைய வெளிப்புற முயற்சிகளிலாவது அவரது நியாயப்பிரமாணத்தை கடைப்பிடிக்கின்றனர். இளைய குமாரனோ, அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட மதக்கொள்கைகளில் கண்டிப்பான நிலையை எடுக்காத பொதுஜனக்கூட்டத்தாரைக் குறிக்கிறது. இளைய குமாரனாகிய இந்த வகுப்பார், இஸ்ரயேல் தேசத்தின் உறுப்பினர்களாக, தெய்வீக வாக்குத்தத்தங்களின்படியான நன்மைகளில் தங்களுடைய சிலாக்கியங்களையும், வாய்ப்புக்களையும் தவறாகப் பயன்படுத்தினர். சுயதிருப்தியினால் தங்கள் வாய்ப்புக்களை வீணாக்கினர். தேவபக்திக்கேற்ற ஜீவியம் ஜீவிக்காமல், ஆயக்காரர்கள் மற்றும் பாவிகள் என்று இவர்கள் பிறரால் அறியப்பட்டனர். இவர்களும் இதை ஏற்றுக்கொண்டனர்.

இந்த இளையகுமாரன் வகுப்பாராகிய ஆயக்காரரும் பாவிகளும் உவமையில் விளக்கப்பட்டபடி, தங்கள் இழிவான நிலையை உணர்ந்தனர். இவர்கள் ஆவிக்குரிய பசி கொண்டிருந்தனர். அவர்கள் கந்தலான ஆடையிலிருந்து, பிதாவின் வீட்டிற்கு திரும்பிவர ஏக்கத்துடனிருந்தனர். ஆயினும் அவர்கள் அங்குசெல்ல தயக்கங்காட்டினர். இப்படிப்பட்ட குணஇயல்புகளை பெற்றிருந்தோரையே இயேசு விசேஷமாக ஊக்குவித்துக் கூறினார்; “வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் அளிப்பேன்”. பிதாவின் வீட்டை இயேசு பிரதிநிதித்துவப்படுத்தி, அவர்கள் மனம்வருந்தி பிதாவினிடத்திற்கு வரும்போது, அவர் அவர்களை ஏற்றுக்கொள்வார் என்றும், பிதாவிடம் பற்றுறுதி

வைக்கும்படியும் யூதருடைய இளையமகன் வகுப்பாரை தூண்டுகிறார்.

இந்த வகுப்பாரில் சிலர், மனம் வருந்தி தேவனிடத்திற்கு திரும்பிவந்து அபரிதமான மன்னிப்பைப் பெற்றுக்கொண்டதாக உவமை நமக்குக் கூறுகிறது. அவர்கள் மன்னிப்புப்பெற்றதோடுகூட, மனம் வருந்தியதினிமித்தமாக, தேவ தயவின் விசேஷித்த வெளிப்பாடுகள் பெற்றுக்கொண்டனர்.

உவமையை தொடர்ச்சியாக கவனிக்கும்போது, கெட்ட குமாரனின் பசி மற்றும் பரிதாபகரமான உணர்வு மூலம் இவையனைத்தும் விளக்கப்படுகின்றன. அவன் கூறுவதாவது; நான் என் தகப்பன் வீட்டிற்குத் திரும்புவேன் என்கிறான்.அவன் தொலைவில் வரும்போது தகப்பன் அவனைக்கண்டு, அவனிடத்திற்கு ஓடி, அவனை தழுவிக்கொண்டு, அவன்மேல் மனதுருகி அவனை முத்தமிட்டார். கெட்ட குமாரன் தகப்பனை நோக்கி; தகப்பனே, பரலோகத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவம்செய்தேன். இனியும் உம் புத்திரன் என்று அழைக்கப்பட நன் தகுதியற்றவன்'' என்றான். ஆனால் அவன் தகப்பனோ, தன் ஊழியக்காரரிடம்,''நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டுவந்து இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும், கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள். நம் புசித்து சந்தோஷமாயிருப்போம்''என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான், காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான்.'' என்றான்.

**உவமையைப் பொருந்தச்செய்தல்**

தேவஅன்பை அதன் நீள அகல உயர ஆழங்களை எவ்வளவு மாட்சி மிக்கதாக இது நமக்கு விளக்குகிறது. பாவ வழிகளிலிருந்து திரும்புகிற அனைவருக்கும், மனந்திரும்பியவனுக்கு கொடுக்கப்பட்ட உயர்ந்த வஸ்திரமும், உபசரிப்புகளும் தேவன் ஏற்பாடு செய்திருக்கிறவைகளைக் குறித்து தெளிவாக விளக்குகிறது. வஸ்திரமும் மற்ற எல்லா ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவின் மூலமாக கொடுக்கப்பட்டு, விழுந்துபோன சுபாவத்தின் அபூரணங்கள் அனைத்தும் மூடப்படுகின்றன. மனம் திரும்புகிறவர்களுக்கென்று தேவன் ஏற்பாடு செய்திருக்கிற ''கொழுத்த பதார்த்தங்கள் அடங்கிய விருந்தை'' கொழுத்த கன்று குறிக்கிறது – ஏசா25:6–8.

உவமையை ஒரு குறிப்பிட்ட பயன்பாட்டுக்கு உருவாக்குதலைப் பற்றி பார்க்கும்போது, ஊதாரி மைந்தனை தகப்பன் ஏற்றுக்கொள்ளும் நேரத்தில், அவனை முத்தஞ்செய்து, கிறிஸ்துவின் நீதியின் ஆடையை அவன்மேல்அணிவிப்பதை கூறலாம். அவர் மூலமாக இந்த யுகத்தில் பிதாவினிடத்தில் வருகிறவர்களுக்கு கர்த்தருடைய பலியை ஏற்பாடு செய்து, எல்லோருக்கும் இலவசமாக அருளியிருக்கிறார். இது பெந்தெகொஸ்தே நாளிலிருந்து துவங்கியது. விருந்தும் மகிழ்ச்சியின் விழாவும் தேவனுடைய ஆசீர்வதிக்கப்பட்ட வாக்குத்தத்தங்களை குறிப்பிடுகிறது. கிறிஸ்துவின் நீதயின் ஆடையால் மூடப்பட்டு பரிசுத்தஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டு, தேவகுடும்பத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுக்கு இவை பொருந்துவதாயுள்ளன.

இது, திருமண விருந்து என்ற மற்றொரு உவமையால் நம் கர்த்தரால் குறிப்பிடப்படுகிறது(மத்22:2–14). நம் பாடத்தில் கூறப்பட்டுள்ள மூத்த மகன், மெய்யாகவே அழைக்கப்பட்டிருந்தாலும், அதை மறுத்தான். அவன் வீட்டினுள் செல்லவில்லை. இளைய ஊதாரிப்பிள்ளையை தகப்பன் ஏற்றுக்கொண்டதைப்பற்றி அவன் பொறாமைப்பட்டான். பரிசேயர்களின் பங்கில் இந்த பொறாமையின் ஆவி, கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய ஈவை மதிப்பிடுவதிலிருந்து அநேகரை தடுத்திருந்தது. உவமைகளில் இப்போது காண்பிக்கப்பட்டபடி அவர்கள் உள்ளே நுழைய மறுத்தனர்.

தன் சகோதரனைப் பண்படுத்துவதில் சந்தோஷப்படுவதற்காக விருந்தில் கலந்துகொள்ள உள்ளே வரும்படி மூத்தமகனை கெஞ்சிக்கேட்டுக்கொண்ட தகப்பனை இவ்வுவமை குறித்துக்காட்டுகிறது. ஆனால் அவனோ கோபங்கொண்டு மறுத்துவிட்டான். இவ்விதமாகவே ராஜ்யத்துக்குரிய சிலாக்கியங்கள் யாருக்கு உறுதிசெய்யப்பட்டிருந்ததோ, அவர்களிடத்தில் யூதரிலுள்ள மூத்த சகோதர வகுப்பார் முறையான ஆவியை வெளிப்படுத்தவில்லை. பிதாவினிடத்தில் வரவிரும்புபவர்கள் எல்லாரிடத்திலும், சாந்தமும் அன்பும், தங்கள் பெருந்தன்மையுமான நல்ல நோக்கத்தையும் வெளிப்படுத்தி, தேவனுடைய நேசகுமாரனை பிரதிபலிக்கவேண்டும்.

மூத்தசகோதரன் விழா நடைமுறைகளில் பங்குபெற மறுத்தது, கர்த்தருடைய திருமணவிருந்து பற்றின மற்றொரு உவமையை நமக்கு நினைவுபடுத்துகிறது(லூக்14:15–24). அவ்வுவமையில் விருந்துக்கு முதன்முதலில் அழைக்கப்பட்டவர்கள்

அலட்சியப்படுத்தி, ஒருவன் தன் வயலுக்கும், மற்றொருவன் தன் வியாபாரத்துக்கும் சென்றுவிட்டான். அவர்கள் தங்கள் பெருவிருந்துக்கு அழைத்த விருந்தளிப்பவரை அவமரியாதை செய்தனர். பிறகு ஊழியக்காரர்களை தெருக்களிலும் வீதிகளிலும் போய், யார் வர விருப்பமாயிருக்கிறார்களோ, அவர்களை வரவழைக்க அனுப்பினான். மீண்டுமாக இடம் இருக்கிறதைக் கண்டு, விருந்தில் பங்குபெறுவதற்கு விருப்பமாயிருப்போரை எப்புறமுமிருந்து கூட்டிவர வேலையாட்களை அனுப்பினார். இறுதியாக, முன்நியமிக்கப்பட்ட இந்த வகுப்பாரின் எண்ணிக்கையும் கண்டடையப்பெற்றது.

**மூலக்கோட்பாடுகள் விசாலமாகப் பொருந்துகிறது**

நம் பாடத்தின் உவமை, யூதர்களின் இரு வகுப்பாரை உதாரணத்துடன் விளக்கும்போது, அதில் வைக்கப்பட்டுள்ள மூலக்கோட்பாடுகள், பொதுவாக பொருந்தக்கூடியதாயுள்ளது. உதாரணமாக, உலகில் நீதியை செய்ய நேசிக்கும் நேரிய குணமுடையோர், நற்குடிப்பிறப்புடையோர், பிறப்புக்குப்பிறகு நல்ல சூழ்நிலையில் வளர்ந்தோர் இப்படிப்பட்டவர்களே தேவனால் முதலாவதாக தெரிந்தெடுக்கப்படுவோராக இருந்து, அவரது குமாரனுக்கு உடன்சுதந்தரவாளிகளாக மாபெரும் இராஜ்யத்தில் இருந்து, பொதுவான உலகமனுக்குலத்தை ஆசீர்வதிப்பர். ஆயினும், இராஜ்ய வகுப்பாராவதற்கு, இத்தன்மையுடைய அநேகர் இருக்கமாட்டார்கள் என்று வேதவசனங்கள் தெளிவாக காண்பிக்கின்றன. அவர்களுடைய கல்வி, சொத்து மற்றும் நல்ஒழுக்கங்கள் இவைகளைப் பெற்றிருப்பவர்களை தெரிந்தெடுக்க விருப்பமற்றவராக தேவன் இருக்கிறார், இந்த இயல்புகள், இராஜ்ய வகுப்பாரின் நிபந்தனைகளைஏற்க, அவர்களை தயார்ப்படுத்துவதில் குறைவேற்படுத்தும்.

அவர்கள் அறிந்திருந்தாலும், அறியாவிட்டாலும் எல்லோரும் பாவிகளே. இவ்வுண்மையை எல்லோரும் ஒப்புக்கொள்வதில் நேர்மையாயிருக்கவேண்டும். கிறிஸ்துவின் புண்ணியம் நமக்கு அருளப்பட்டு, நம் கறைகளை மூடவேண்டும் என்ற இந்த தேவையை நேரியமனதோடு நாம் ஒப்புக் கொள்ளவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். இந்த மேலான வகுப்பார், மூத்தசகோதரனை பிரதிபலிப்பவர்களாயிருந்து, சமுதாயத்தில் கீழான படிநிலையிலிருக்கிற பூரணர்களிடத்தில், முரண்பாடுள்ள உணர்வைக் கொண்டுள்ளனர். ஆனால் தேவன் அவர்களை விரும்புகிறார் என்பது உறுதி. ஆயினும் தேவன் பிரகடனப்படுத்துகிறபடி, தெரிந்தெடுக்கப்பட்டோரில் ஞானிகள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை, கல்விமான்கள் அநேகரில்லை, அதற்கு மாறாக, தேவன் உலகத்தில் அற்பமானவைகளை விசுவாசத்தில் ஐஸ்வரியவான்களாக, இராஜ்யத்தின் சுதந்திரர்களாக தெரிந்துகொண்டார்.

தங்கள் சொந்த அபூரணங்களையும், அவரது தயவுகளைப் பெற தகுதியற்ற நிலைமையையும் ஏற்றுக்கொள்கிற நேர்மையான வகுப்பாரையே தெரிந்தெடுக்க தேவன் விரும்புகிறார். அவ்வாறுசெய்து, அவர்களைப் பற்றிய அறிவைக் கொடுத்து, அவரது நீதியால் அவர்களை அவர் ஆசீர்வதிக்கிறார். ஆனால் மற்றவர்களோ, சுயதிருப்தியினாலும், கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய கிருபையை ஏற்க மனதின்றி இருந்து, அல்லது, தங்களுடைய கறைகளுக்கான மூடுதல் தேவை என்று ஒப்புக்கொள்ளாதிருந்து, படிப்படியாக அடையும் மேலான மகிமையின் பணிக்காக கர்த்தர் விரும்புகிற வகுப்பாராக ஆவதற்கு மனத்தாழ்ச்சியில்லாதோராக இருக்கின்றனர்.

இப்படியாக, பெரும்பாலும் இளைய சகோதரன் வகுப்பாரிலிருந்தே தேவ தயவை ஏற்றுக்கொண்டு, அவரது பிள்ளைகளாக ஆகிறார்கள். இதனையே அப்போஸ்தலர்கள், ஐஸ்வரியவான்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை, கற்றோர் அநேகரில்லை, ஞானிகள் அநேகரில்லை, மாறாக இவ்வுலகின் தரித்திரரே விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகின்றனர் என்று விவரிக்கின்றனர். இவர்கள் அழைப்புக்கு செவிசாய்க்கும் செவியைப் பெற்றுள்ளனர். “வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்”. இவர்கள் இந்த அழைப்புக்கு பதிலளிக்கும் இருதயத்தை உடையோராய் இருக்கின்றனர். இவர்கள் மிகப் பரிதாபகரமான தங்களுடைய நிலைமையையும், தங்களுக்கு உதவி தேவைப்படுவதையும் உணர்ந்திருக்கும் வேளையில், வெளிப்படையான ஜீவியம் ஜீவிக்கும் மற்றவர்களோ, தங்களுக்கு மன்னிப்பும் உதவியும் தேவை என்பதை கண்டுணராதிருப்பதையும் புரிந்துகொள்கின்றனர்.

அநேகமாக, தரித்திரருக்கும், தேவைப்படுகிறவர்களுக்கும் இவ்வுவமை, மற்ற உவமைகளைக் காட்டிலும் மிகவும் உதவிகரமாயிருக்கிறது, பாவநிலையிலும், பலவீனத்திலுமிருப்பவர்கள்,

பாவவழிகளிலிருந்து திரும்பும் ஆவலை உடையோராய் இருக்கும்போது, தேவகுடும்பத்திற்குள் மீண்டும் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். இந்த உவமையிலுள்ள தங்கள் சொந்த உருமாதிரியை அவர்கள் கண்டு, அவர்களை ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கும் பிதாவாக அது சித்தரிப்பதால், திடங்கொள்கிறார்கள். இது, பாவிகளுக்கு பொதுவாக, மகிழ்ச்சியூட்டுகிற சிந்தைக்கு முற்றிலும் முரணாக இருக்கிறது. இருண்ட யுகங்களின் விசுவாசப்பிரமாணங்களால், பரலோகப்பிதாவின் குணாதிசயம் அவர்களுக்கு தவறாக அறிவிக்கப்பட்டது, இதனால் பரலோகத் தகப்பனிடமிருந்து இரக்கமான வரவேற்பை எதிர்பார்க்க முடியாது என்று அவர்கள் அவரைப்பார்த்து பயப்பட்டனர். தரித்திரருக்கும், இழிவான நிலையிலிருப்போர்க்கும் தேவனுடைய குணாதிசயத்தைப் பற்றின முறையான கருத்து சென்றடைந்ததால், இந்த உவமையிலும் மற்ற வசனங்களிலும் கொடுக்கப்பட்ட ஆலோசனையின் நம்பிக்கையை அவர்கள் அடைந்தனர். இந்த நம்பிக்கையானது, எல்லா கிருபையும் நிறைந்த தேவனிடத்திற்கு முழுமையாக திரும்பிவரவும், தங்களை முழு சரணாகதி அடையச்செய்யவும், அவர்களில் அநேகரை வழிநடத்தியது, உதவிபுரிந்தது.

கெட்ட குமாரனை, தன்னைத்தானே உணருகிறவனாக குறிப்பிட்டு, தன் பேரிடரான வறுமையை உணரச்செய்ய விழிப்பூட்டி, தன் தகப்பன் அபரிதமான வளமையை உடையவர் என்றும், இனியும் தனக்கு அவரது ஆசீர்வாதத்தைப்பெற தகுதியில்லாதபோதிலும், அவர் அதை அளிக்க சித்தங்கொண்டிருக்கிறார் என்ற உண்மையை அறியும் அறிவை அடையச்செய்தது. ''நான் எழுந்து, என் தகப்பனிடம் செல்வேன்'' என்ற அவனது உணர்ச்சி வெளிப்பாடு, மனந்திரும்புகிற எல்லோருடைய மனப்பாங்கு என்னவாயிருக்கவேண்டும் என்பதை அடையாளப்படுத்துகிறது. பரலோகத் தகப்பனின் இரக்கம் மற்றும் அன்பில் நம்பிக்கை கொண்டிருக்கவும், கிறிஸ்துஇயேசுவுக்குள் அவர் ஏற்பாடுசெய்திருக்கிற அவர்களுக்கான பாவமன்னிப்பை அடையும் அவர்களுக்கான வரவேற்பைப் பெறவும், இதே மனப்பாங்கு எல்லா கிறிஸ்தவ ஜனங்களுக்கும் உதவிபுரியும்.

------------------

**R 5435**

## ''தெய்வீகப் புதிர்கள்''

## "DIVINE PARADOXES'

**"திறவுகோல் வசனம் : சங்கீதம் 63:3 "ஜீவனைப் பார்க்கிலும் உமது கிருபை நல்லது; என் உதடுகள் உம்மைத் துதிக்கும்''**

இந்த திறவுகோல்வசனம் இரு வழிகளில் கண்ணோக்கப்படலாம். இவை இரண்டுமே மிக பொருத்தமானவையாயுள்ளது.முதல் வழியானது, சங்கீதக்காரனுடைய கண்ணோட்டம் மற்றும் அதன் அர்த்தத்தின்படி மட்டும் ஆராய்ந்து பார்ப்பது. மற்றொன்று, தீர்க்கதரிசனத்தின் நிலைப்பாட்டிலிருந்து கவனித்துப் பார்த்தல். தேவனுடைய தயவு, ஜீவனைப் பார்க்கிலும் அதிகம் விரும்பத்தக்கது என்று தாவீது தீர்க்கதரிசி பொருள்படுத்துகிறார் என்பதை நாம் புரிந்துகொள்கிறோம்.அதாவது, தெய்வீக தயவில்லாமல் ஜீவிப்பதைக் காட்டிலும் மரித்துவிடலாம் என்பதாகும். இதை மற்றொருவழியில் தீர்க்கதரிசன கோணத்தில் பார்க்கும்போது, இங்கும் மற்ற இடங்களிலும் தலை மற்றும் சரீரமாகிய கிறிஸ்துவுக்கு அடையாளமாக சங்கீதக்காரன் இருக்கிறார். இயேசு தலை, அவரது அங்கங்கள் சபை.

நம் அர்ப்பணிப்பு உடன்படிக்கை மரணபரியந்தமானது. நமது சரீரங்களை பரிசுத்தமும் அவருக்குப் பிரியமுமான ஜீவபலிகளாக செலுத்தும்படிக்கு தேவன் நம்மை அழைத்திருக்கிறார். மேலும், வரவிருக்கிற ஜீவியத்திற்கான மகா மேன்மையும் அருமையும் விலையேறப்பெற்றதுமான வாக்குத்தத்தங்களை நமக்கு அளித்திருக்கிறார். ஆகவே அவர்மீதான அன்பினிமித்தமாகவும், நீதியின் கொள்கையை நேசிக்கவும் நமது ஜீவியங்களை கையளிக்க மனதாயிருந்தால் மட்டும் போதாது, மகிழ்ச்சியோடு ஒப்புக்கொடுக்கவேண்டும். தேவனுக்குப் பிரியமான காரியங்களை செய்வதற்கு நம் மனித ஜீவியங்களை சந்தோஷத்தோடு சமர்ப்பிக்கவேண்டும்.

தேவ தயவு என்பது நித்திய ஜீவன் என்ற கருத்தை தாவீதின் மற்றொரு சங்கீதம் நமக்குத் தருகிறது(சங்30:5). தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான் என்ற மற்றொரு தெய்வீகப் புதிருக்கு இசைவாக மேற்கண்ட புதிர்களாலான வாக்கியங்கள் உள்ளன. தன் பூமிக்குரிய ஜீவியத்தை சரணடையச் செய்பவன், மகிமை கனம்

சாவாமையாகிய தெய்வீக சுபாவத்தை ஆதாயமாக்குவான். சபைக்கு நீட்டிக்கப்பட்ட தெய்வீக தயவை குறிப்பிடுகின்ற இந்த மகிமையான காரியங்களைக் குறித்து நாம் வியந்து பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகிறோம். மேலான பங்கை நாம் தெரிந்தெடுத்திருக்கிறோம்.

''ஆகையால் என் உதடுகள் உம்மைத் துதிக்கும்'' ''நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்''(ரோமர் 10:10). கர்த்தரிடத்திலான நம் கீழ்ப்படிதலை நிரூபிப்பதற்கு, நீதியாய் நடப்பதே சிறந்த வழிகளில் ஒன்று என்று நாம் ஒருவேளைகூறக்கூடும், ஆனாலும் கர்த்தருக்கு பிரியமாய் ஜீவிக்க கடினமாக முயற்சிக்கிற சிலர், அவரை அறிக்கையிடுவதில் அவர்கள் தடைபண்ணப்பட்டிருக்க கூடும். அறிக்கையிடுவதன் மூலம் நாம் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு காரணங்கள் உள்ளன. இதில் உலகிற்கு சாட்சியளிப்பது ஒரு காரணமாகும் – இருளிலிருந்து வெளியே அழைத்தவரது புகழை வெளிப்படுத்துவது இரண்டாவது காரணமாகும். இந்த சாட்சியமானது நம்மீது நல்ல விளைவை ஏற்படுத்தும். இந்த சாட்சியத்துக்கு ஆதரவாக, நம் சுபாவ ஆற்றல்களை பட்டியலிடுகிறோம். இவ்வாறாக நம் சுபாவ ஆற்றல்கள் அனைத்தையும் பொருந்தப்பண்ண முடியும்.

சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது எதிர்ப்பைக் கொண்டுவரும். நம் கர்த்தர் பிசாசுகளை விரட்டியும், நோயுற்றோரை குணப்படுத்தியும் செய்திருந்து, தெய்வீகத் திட்டத்தைப் பற்றி எதுவும் பேசாதிருந்திருப்பாரானால், அவர் ஒரு சிறந்த குணாதிசயமுள்ளவராக, நன்மை மட்டும் செய்கிற மனிதராக தம்மை காண்பித்திருக்க சாத்தியமுண்டு. ஆனால் பரிசேயர் மற்றும் சதுசேயரிலிருந்து வேறுபாடாக அவர் போதித்ததால், சத்தியத்தை அவர் பிரசங்கித்தது, அவரை சுற்றிலும் உள்ளவர்களுடைய போதகங்களை மீறுவதாக எண்ணப்பட்டு, அவர்களுடைய கோபத்தை தூண்டியது.

இன்றையநாளிலும் அவ்வாறே நடக்கிறது. சத்தியத்தை அறியப்பண்ணும்போதே எல்லா உபத்திரவங்களும் வந்துசேருகின்றன. இதற்கு எந்தக் காலமும் விதிவிலக்கல்ல. இருண்டயுகப்பிரிவுகளிலும் சுவிசேஷ யுகம் முழுவதிலும் நற்காரியங்களை சத்தியமாய் பிரசங்கிப்போர் மீது, இருளின் அதிபதியினால் சிந்தைகள் குருடாக்கப்பட்டோரிடமிருந்து, உபத்திரவங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கர்த்தரின் சுவிசேஷத்தைக் கூற நம் உதடுகளைத் திறக்குமளவுக்கு, சாத்தானால் குருடாக்கப்பட்டோரிடமிருந்து அவனது எதிர்ப்புக்குள்ளாவோம். உதடுகளால் ஒருவர் தேவனை தூஷிக்கமுடியும், அதே உதடுகளால் அவர் மனுஷரை காயப்படுத்தவும் முடியும். தேவனுக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட இந்த வகுப்பாரின் உதடுகள், தற்கால ஜீவியத்தில் அவரது ஊழியத்துக்கென ஒப்புவிக்கப்பட்டுள்ளன. அவரது துதியை பறைசாற்ற அவை அர்ப்பணிக்கப்படவேண்டும். நம் தேவனின் பரிவிரக்கத்தையும், மகிமையான குணாதிசயத்தையும் எடுத்துக் காண்பிக்கவேண்டும். நம் கண்களுக்கு மகத்துவமாய்த் தோன்றுகிற தெய்வீகத் திட்டத்தின் அதிசயங்களை எடுத்துரைக்க வேண்டும்.

-----------

**R 5432**

ஒருபோதும் உறங்காத ஒரு விழி உண்டு;
இரவின் சிறகின் கீழ்
ஒருபோதும் மூடாத ஒரு காதுண்டு ;
வெளிச்சக் கற்றைகள் மறைகையில்
ஒருபோதும் களைப்படையாத ஒரு புயம் உண்டு ;
மனித பலம் குன்றும்போது
ஒருபோதும் தோல்வியுறாத ஒரு அன்புண்டு ;
பூமிக்குரிய நேசங்கள் சிதையும்போது

ஓ! அக்கறை காட்டுவோர் ஒடுக்குவதால்,
களைப்படைந்த ஆத்துமாவே
அவரது வலிமையான அன்பை நம்பு,
உன் சோர்வுற்ற இரவுகளில் !
அவரது கண் கவனிக்கிறது உன் வழிகள் அனைத்திலும் !
அவரது உறுதியான வார்த்தையை நம்பி,
அவரிடத்தில் ஜெபம் , துதியில் நெருங்கு!
உன் உண்மையும் அன்புமுள்ள கர்த்தரை,
உன் வழிகளிலெல்லாம் ஏற்றுக்கொள்!

---------